Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 29 2024

வியாழக்கிழமை ஆகஸ்ட் 29, 2024 | ஒளி: 10 கதிர் 039 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# 'ஹலோ' தவிர பேசியவை பொய்

## பொத்துவிலில் எம்.பியை சாடினார் ரிஷாட்

**இஸ்லாத்தின் நம்பிக்கைகளை ஏளனம் செய்த, முஸ்லிம்களை பயங்கரவாதிகளாகச் சித்தரித்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை புகழ்ந்து பேச ஆரம்பித்தார்**

பொத்துவில் மக்கள் தம்மோடு உள்ளதாகக் காட்டி, மேலும் பல கோட்டாக்களை ஜனாதிபதியிடமிருந்து பெற முயலும் ஏமாற்று அரசியல்வாதிக்கு, தகுந்த பாடம் புகட்டப்படுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

சஜித் பிரேமதாசவை ஆதரித்து, பொத்துவிலில் செவ்வாய்க்கிழமை (27) நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

"மரியாதைக்கும் கண்ணியத்துக்கும் உரியவர்களை அரசியல்வாதிகளாக்கிய பெருமை பொத்துவில் மண்ணுக்கு உள்ளது. மர்ஹூம் அஸீஸ், எஸ்.எஸ்.பி.மஜீத் உள்ளிட்ட பலர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

இந்த வரலாற்றுப் பின்னணியிலேதான், எமது கட்சியும் பொத்துவிலிலிருந்து ஒருவரை எம்.பியாக்கியது. கட்சித் தலைமை மீதும் மண்ணின் மரியாதையிலும் நம்பிக்கை வைத்தே பொத்துவில் மக்கள் அவருக்கு வாக்களித்தனர்.

பெரும்பான்மைவாத மேலாதிக்க சிந்தனையில் செயற்பட்ட கொடுங்கோலன் கோட்டாபய ராஜபக்ஷ, மத நம்பிக்கைகளைக் கொச்சைப்படுத்தி, சிறுபான்மைச் சமூகங்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக மாற்றத்துடித்தார். கொரோனாவில் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை தீயிட்டு எரித்தார்.

"எங்களது மத நம்பிக்கைகளைப் பழிவாங்காதீர்கள்" என்றோம். இவரின் போக்கை எதிர்த்து சமூகக் குரல்களை கடுமையாக உயர்த்தினோம். சில காலங்கள் எங்களது இந்த செயற்பாடுகளுக்கு ஒத்துழைத்த இந்த ஊர் எம்.பி. பின்னர், பேரினவாதிகளால் விலை பேசப்பட்டார். இதன் பின்னர், இவரது போக்குகள் பேடித்தனமாக மாறின.

தொடர்ச்சி P2



# இஞ்சி ரூ.3,200

இஞ்சியின் விலை 3,200 ரூபாவாக அதிகரித்துள்ளதால் நுகர்வோரின் தேவை குறைந்துள்ளதாக அறியமுடிகின்றது. விதை இஞ்சியை விவசாயிகள் விற்பனை செய்வதன் மூலம் விரைவாக இலாபம் ஈட்டுவதாகவும், ஆனால், மருத்துவ குணம் கொண்ட இஞ்சி அல்லது உள்ளூர் இஞ்சிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் வியாபாரிகள் குறிப்பிடுகின்றனர். அத்தோடு, அண்மையில் பெய்த பலத்த மழையினால் பயிர்கள் நாசமடைந்து இஞ்சி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி வேலை நிறுத்தம்



இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள், ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் புதன்கிழமை (28) ஈடுபட்டனர்.

கைதுசெய்யப்பட்ட 8 மீனவர்கள் மீதும் எல்லை தாண்டி மீன்பிடித்தல், தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட பிரிவுகளின் கீழ் இலங்கை ஊர்க்காவல்துறை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2



# "தனி நபர்கள் உரிமை கொண்டாட முடியாது"

கண்டி மாவட்ட தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித்துவம், நமது கட்சி போராடி பெற்றுக்கொண்ட கண்டி மாவட்ட தமிழ் மக்களுக்கு உரிய கௌரவமாகும். இதை தனிப்பட்ட நபர்கள் எவரும் பறித்து உரிமை கொண்டாட முடியாது என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

ஜனாதிபதித் தேர்தல்

# ரணிலின் தகுதியை சவால் செய்யும் மனு நிராகரிப்பு



பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்கத் தவறியமை மற்றும் உச்ச நீதிமன்றத்திற்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் நீதியரசர்களை நியமிக்காமை என்பவற்றின் அடிப்படையில், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் என அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை, விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. நீதிமன்ற கட்டணமாக 50,000 ரூபாய் செலுத்துமாறும் மனுதாரருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் நீதிமன்றத்திற்கு பொய்யாக தகவல்களை சமர்ப்பித்துள்ளதாகவும், அந்த மனு அரசியலமைப்பின் 92ஆவது சரத்தை மீறி இருப்பதாகவும் சட்ட மா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே இதன்போது ஆட்சேபனை தெரிவித்தார்.

# "திருடர்களின் ஆதரவில்லாமல் பொறுப்புக்களை கையேற்பேன்"



எனக்கு கிடைக்கின்ற மக்கள் வரத்தை என் உயிரைப் போல் பாதுகாத்து, அதன் கௌரவத்தைப் பாதுகாத்து இன, மத, குல, கட்சி பேதமின்றி நாட்டை அபிவிருத்தி அடையச் செய்வேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்திக்கும் எனக்கும் திருடர்களுடன் எந்த டீலும் இல்லாத காரணத்தினால், நாட்டின் வளங்களையும் சொத்துக்களையும் பணத்தையும் திருடிய திருடர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவோம். எனக்கும் எனது குழுவுக்கும் அதனை எந்த தயக்கமும் இன்றி நிறைவேற்ற முடியும். நான் ஜனாதிபதி பதவிக்கும், பிரதமர் பதவிக்கும், எனது சுய கௌரவத்தையும் மக்களின் பாரம்பரியத்தையும் காட்டிக் கொடுக்கவில்லை. மக்களின் ஆணையுடன் நாட்டுக்கான எனது பொறுப்பை ஏற்றுக்கொள்வேன் என்றார்.

தொடர்ச்சி P2

# செப்டெம்பரில் புதிய தீர்மானம் வருகிறது

பொருளாதார சீர்திருத்தங்கள், மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளமை தொடர்பில் சர்வதேச பங்காளிகளுக்குக் காண்பிப்பதற்கு இலங்கை அரசாங்கம் முயல்வதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# அதிகரிக்கும் வெப்பநிலை: மருத்துவர்கள் எச்சரிக்கை



நாட்டில் தற்போது அதிகரித்து வரும் வெப்பநிலையினால், தோல் நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கொழும்பு-சீமாட்டி சிறுவர் மருத்துவமனையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளதாவது,

நாடு முழுவதும் அதிகரித்து வரும் வெப்பநிலையால் குழந்தைகளிடையே தோல் நோய் பிரச்சினைகள் மிகவும் பொதுவான ஒன்று. அதிகரிக்கும் வெப்பநிலையினால் தோல் நோய்கள் ஏற்படுவதோடு உடலில் நீர்ச்சத்து குறைபாடு அதிகரிக்கும். எனவே அதிக சூரிய ஒளி படும் இடங்களில் இருப்பதைத் தவிர்ப்பதோடு, அதிகளவு தண்ணீர் பருக வேண்டும்.

தொடர்ச்சி P2

# "எம்.பிக்களுக்கு நேரடியாக பணம் கிடைக்காது"



அபிவிருத்தி பணம் ஜனாதிபதி செயலகத்தால் நேரடியாக மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்படுகின்றதே தவிர எந்த பாராளுமன்ற உறுப்பிருக்கும் நேரடியாகக் கொடுக்கப்படவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர் உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வெளியிட்ட ஊடக அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கை தமிழ் அரசுக் கட்சி) பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதாகப் பெரியளவிலான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சி P2

# பதில் கடிதத்தில்

## சஜித்துக்கு அனுப்பியது கஜேந்திரன் அணி

விடயங்கள்

நடைபெறவிருக்கும் தேர்தல் தொடர்பான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நிலைப்பாடு தொடர்பாக சஜித் பிரேமதாச அனுப்பிய கடிதத்திற்கு முன்னணியின் பதில் கடிதம் புதன்கிழமை (28) அனுப்பிவைக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பதில்

தொடர்ச்சி P2

# "ஜே.வி.பிக்கு தமிழர்கள் வாக்களிக்க மாட்டார்கள்"



க.அகரன்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை தமிழீழ விடுதலை இயக்கம் ஒருபோதும் ஆதரிக்காது. நாம் மூவர் ஜனாதிபதியைச் சந்தித்ததாக எம் மீது சேறு பூச முனைகிறார்கள். அத்துடன் ஜே.வி.பியினர் தமிழர்களின் அடித்தளத்தையே உடைத்து வடக்குக் கிழக்கைப் பிரித்தவர்கள். அவர்களுக்கும் தமிழர்கள் வாக்களிக்க மாட்டார்கள் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கநாதன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# "இன்னும் கொஞ்சம் தூரத்திற்கு செல்வோம்"



நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு ஒளிமயமான நாளை உருவாக்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பயணிக்கும் இந்த கடினமான பொருளாதார பாதையில் இன்னும் கொஞ்சம் தூரத்திற்குச் செல்ல வேண்டும் என ஆளும் கட்சியின் பிரதம கொறடாவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

# "கிழக்கு மண்ணுக்கு ஹக்கீம், ரிஷாத் வேண்டாம்"

பாறுக் ஷிஹான்

"ஏமாற்றுத் தலைமைகள் ஹக்கீம், ரிஷாத் கிழக்கு மண்ணுக்கு வேண்டாம்" என்ற சுவரொட்டிகள் கிழக்கில் ஒட்டப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அம்பாறை மாவட்டத்தின் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பல்வேறு பகுதிகளில் இவ்வாறான சுவரொட்டிகள் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன. ஜனதிபதித் தேர்தல் செப்டெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், 2024ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி தேர்தல் சூடுபிடித்துள்ளது.




தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘ஹலோ’ தவிர பேசியவை பொய்

அவுஸ்திரேலியா, கனடா, பிரிட்டனுக்கு அனுப்புவதாகக் கட்சியின் பெயரைப் பயன்படுத்தி, மக்களிடம் பணம் வாங்கி மோசடி செய்தவர் இவர். இதுபற்றிக் கேட்டால் கூச்சமின்றி பொய்யுரைப்பார். தொலைபேசியில், “ஹலோ” என்பதைத் தவிர, பேசிய அனைத்தும் பொய்களாகவே இருந்தன. இவரிடம் இனியும் ஏமாறாதீர்கள் என்பதற்காகவே இதைக்கூறி எச்சரிக்கிறேன்.

இஸ்லாத்தின் நம்பிக்கைகளை ஏளனம் செய்த, முஸ்லிம்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரித்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவை புகழ்ந்து பேச ஆரம்பித்தார். பஷில் ராஜபக்ஷவை ஏழு மூளையாக புகழாரம் சூடி, நிதியமைச்சராக இவரே வரவேண்டும் என்றெல்லாம் கூறியதற்குப் பின்னால், பல காரணங்கள் இருந்தன. அதிகார மோகத்தால், இவரது ஆத்மீக உணர்வுகள் பூச்சியமாகின.

ஆனால் நடந்தது என்ன? பஷில் ராஜபஷ்வால் ஒரு பட்ஜெட்டைக் கூட சமர்ப்பிக்க முடியாமல் போனது. மஹிந்தவும் மக்களால் நிராகரிக்கப்பட்டார். கொடுங்கோலனை மக்கள் விரட்டியடித்தனர்.

இந்த நிலையில்தான், ஆட்சியைப் பாரமெடுக்குமாறு சஜித் பிரேமதாசவிடம் கோரினர். மக்களால் நிராகரிக்கப்பட்ட ஆட்சியை பாரமெடுக்க முடியாதென சஜித் நிராகரித்தார். இவ்வாறுதான், பிரதமர் பதவியிலிருந்து ரணில் விக்ரமசிங்க நீக்கப்பட்டபோது, 52 நாள் ஆட்சியிலும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரியிடமிருந்து சஜிதுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆட்சி, அதிகாரத்துக்கு ஆசைப்படாத மற்றும் மக்கள் ஆணைக்கு விரோதமாகச் செயற்பட விரும்பாத சஜித் பிரேமதாச, இந்த அழைப்பையும் நிராகரித்தார். இதுவே வரலாறு.

நாட்டின் பொருளாதாரத்தைப் பாதுகாக்கும் நிபுணத்துவமுள்ளவர்கள் எம்முடன் உள்ளனர். ஹர்ஷ டி சில்வா, கஜீவ சேனசிங்க, எரான் விக்கிரமரட்ன மற்றும் கபீர்ஹாஷிம் போன்றவர்கள் இதற்கு முன்னுதாரணம்” என்று கூறினார்.

# “திருடர்களின் ஆதரவில்லாமல் பொறுப்புக்களை கையேற்பேன்”

தற்போதைய ஜனாதிபதி பதில் ஜனாதிபதியாகப் பதவியேற்ற உடன் திருடர்களைப் பாதுகாக்கின்ற வாயிற் காவலாளியாகவும், பொலிஸ் மா அதிபராகவும் செயற்படுகின்றார். அவ்வாறான ஜனாதிபதி பதவி தனக்குத் தேவையில்லை என்றார்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த 23 ஆவது மக்கள் வெற்றிப் பேரணி அம்பாறை பஸ் நிலையத்திற்கு அருகில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது, எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொரோனா தொற்று பரவல் மற்றும் நாட்டை வங்குரோத்து அடையச் செய்தமை ஆகிய மூன்று காரணங்களாலும் நாட்டின் விவசாயிகள் பாரிய சிக்கல்களை எதிர் கொண்டார்கள். இயற்கை உர ஊழல் மற்றும் நானோ ஊழல் என்பனவற்றின் காரணமாக விவசாயிகளின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. உயர்தரத்திலான 50 கிலோ கிராம் உர மூடை ஒன்றை 5,000 ரூபாவிற்கு வழங்குவதோடு, நியாயமான விலையில் இரசாயன மருந்துகளையும் திரவ உரங்களையும் முறையாக கமநல சேவை மத்திய நிலையங்கள் ஊடாக விவசாயிகளுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது தெரிவித்தார்.

நெல்லுக்கான நிர்ணய விலையை வழங்குவதோடு, நாடு, சம்பா, கீரி சம்பா, கெகுலு போன்ற அரிசிகளுக்கு விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைப்பதில்லை. அத்தோடு நாட்டில் செயல்படுகின்ற அரிசி மாபியாவை ஒழிப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம் என்றார்.

அழுத்தங்களையும், பிரச்சினைகளையும் எதிர்கொண்டுள்ள விவசாயிகளின் விவசாயக் கடன்களை இரத்து செய்வோம் என்று கூறுகின்ற போது அதனை எவ்வாறு மேற்கொள்வது என்று நயவஞ்சகங்கள் கேட்கின்றார்கள். பிணை இன்றி எந்த ஒரு பாதுகாப்பும் இல்லாமல் கோடிக்கணக்கில் வங்கிகளில் கடனை பெற்றுக் கொண்டு அதனை மீளச் செலுத்தாதவர்கள் அம்பாறை மாவட்டத்திலும் இருக்கின்றார்கள். அவர்களுக்கு அரசியல்வாதிகளின் உதவிகள் கிடைப்பதால் அந்தக் கடனை இரத்துச் செய்ய முடியுமாக இருக்கின்றது என்றார்.

அந்த சக்தி வாய்ந்தவர்களுக்குக் கிடைத்த அதிகாரம் இந்த மண்ணிலே இருக்கின்ற சாதாரண மக்களுக்குக் கிடைக்காவிட்டாலும் அந்த அதிகாரம் செப்டம்பர் 21ஆம் திகதி மக்களுக்குக் கிடைக்கும் நாள் உதயமாகும். அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி விவசாயிகளின் விவசாயக் கடனை இரத்து செய்கின்ற யுகத்தை உருவாக்குவோம். கோடீஸ்வரர்கள் ஆட்சி செய்கின்ற காலமா மக்கள் ஆட்சி செய்கின்ற காலமா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை மக்களிடமே காணப்படுகின்றது என்றார்.

ஜனசவிய வறுமையை ஒழிப்பதற்கு ஊன்றுகோலாக அமைந்த வேலைத் திட்டமாகும். தற்பொழுது வறுமையை ஒழிக்கும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதில்லை என்பதால் ஜனசவிய, சமுர்த்தி, கெமிதிரிய போன்ற வேலைத் திட்டங்களில் உள்ள சிறந்த விடயங்களை உள்ளடக்கி, வறுமையைப் போக்கும் புதிய வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுப்போம். அதனூடாக இலவசமாகப் பணம் வழங்கப்பட மாட்டாது. கிடைக்கப்பெறுகின்ற நிவாரணங்களைக் கொண்டு 24 மாதங்களுக்குள் வறுமையிலிருந்து மீண்டு வருவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் சுட்டிக்காட்டினார்.

எவரும் தொடர்ந்தேச்சையாக வரியவர்களாகவும் அல்லது அரசாங்கத்தின் அடிமைகளாகவும் இருப்பதற்கு விரும்புவதில்லை. எனவே நுகர்வு, சேமிப்பு, உற்பத்தி, ஏற்றுமதி முதலீடு ஆகிய ஐந்து துறைகளுக்குள் வழங்கப்படுகின்ற நிதியைப் பயன்படுத்த வேண்டும் என்பதோடு, அதற்காக 24 மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 20,000 ரூபாய் வீதம் வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# அதிகரிக்கும் வெப்பநிலை: மருத்துவர்கள் எச்சரிக்கை

செயற்கையான குளிர்பானங்களை அருந்துவதைத் தவிர்த்து தண்ணீர், எலுமிச்சை சாறு, இளநீர் போன்றவற்றைப் பருக வேண்டும் எனவும் பிள்ளைகளை ஒரு நாளைக்கு இரண்டு முறை குளிர்ப்பாட்ட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சூரியன் தெற்கு நோக்கிய நகர்வதால் செப்டெம்பர் 6 ம் திகதி வரையில் சூரியன் நாட்டின் பல பிரதேசங்களுக்கு மேலாக உச்சம் கொடுக்கின்றது. மதியம் சுமார் 12.11 மணியளவில் நெடுந்தீவு, பூநகரி, தட்டுவன்கோட்டை மற்றும் சுண்டிக்குளம் போன்ற இடங்களுக்கு மேலாக சூரியன் புதன்கிழமை (27) உச்சம் கொடுத்தது.

இந்த நிகழ்வுக்கு உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றங்களே காரணம் என வளிமண்டலவியல் ஆய்வுத் துறையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “எம்.பிக்களுக்கு நேரடியாக பணம் கிடைக்காது”

இந்நிதியானது குறிப்பிடப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டது போன்ற தோற்றப்பாடு வேண்டுமென்றே ஏற்படுத்தப்படுகின்றது. பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிதி, மற்றும் பல்வேறு அபிவிருத்தி நிதிகள் ஜனாதிபதி செயலகத்தால் இவ்வருடம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இதற்கு உதவியாக அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களால் அபிவிருத்திக்காக முன்மொழிவுகள் கோரப்பட்டிருந்தன. இக்கோரிக்கைகளின் அடிப்படையில் வெவ்வேறு தொகைகள் ஜனாதிபதி செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இப்பணங்கள் மேற்சொன்ன அபிவிருத்தி பணிகளுக்காக நேரடியாக மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பப்படுகின்றதே தவிர எந்த பாராளுமன்ற உறுப்பிருக்கும் நேரடியாகக் கொடுக்கப்படவில்லை. அண்மைக்காலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற தவறான விஷமப்பிரசாரங்கள் காரணமாக இவ்வறிக்கை வெளியிடப்படுகின்றது என்றுள்ளது.

# பதில் கடிதத்தில்

கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த 2024.08.11ஆம் திகதியிட்ட கடிதம் மூலம், எமது கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு எழுதிய கடிதம் தொடர்பில் எமது கட்சியின் நிலைப்பாடுகளை தங்களுக்கு தெரிவித்துக் கொள்ளும் நோக்கில் இக்கடிதத்தினை எழுதுகின்றேன்.

கடந்த 2022 ஆம் ஆண்டு கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு எதிராக நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் விளைவாக - கடந்த 2022 இல் ஜனாதிபதி வெற்றிடம் ஏற்பட்டபோது பாராளுமன்ற உறுப்பினர்களால் வாக்கெடுப்பு மூலம் ஜனாதிபதியொருவரைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் பாராளுமன்றினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது, அதன்போது நீங்கள் எமது ஆதரவினைக் கோரி எம்மை அழைத்துச் சந்திப்பொன்றை மேற்கொண்டிருந்தீர்கள்.

ஒரு நாட்டுக்குள் இரண்டு தேசங்களாக வாழக்கூடிய சமஷ்டி அடிப்படையிலான தீர்வே ஒரே வழியாகும் என்பதே எமது கொள்கை நிலைப்பாடாகும்.

* ஒற்றையாட்சி முறைமை நீக்கப்படல் வேண்டும்.
* இணைந்த வடக்கு கிழக்கு தமிழர் தாயகமாக அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
* மதசார்பற்றதாக இருத்தல் வேண்டும்.
* தமிழர் தேசமும் அதன் இறைமையும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
* தமிழ் மக்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
* இவற்றின் அடிப்படையில் சமஷ்டி தீர்வு எட்டப்படல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

# “இன்னும் கொஞ்சம் தூரத்திற்கு செல்வோம்”

இந்தப் பொருளாதாரப் போக்கை மாற்றினால், கடந்த காலத்தை விட அதிக சிரமங்களை நாம் சந்திக்க நேரிடும் என அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

உடுகம்பொல பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை(27) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அனுரகுமார ஆகியோருக்கு ஜனாதிபதி பகிரங்க அழைப்பு விடுத்தார். இருவருமே கதைப்பதில் வல்லவர்கள். எனவே, குதித்து இந்த சவாலை ஏற்றுக்கொள்வார்கள் என்று நாங்கள் நினைத்தோம்.

எதிர்க்கட்சித் தலைவர் மிகவும் யோசித்து அந்த சவாலை ஏற்றுக்கொண்டுள்ளார். ஆனால், அவர் ஜனாதிபதி வேட்பாளராக இந்த விவாதத்திற்கு வருவாரா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஒவ்வொரு முச்சந்தியிலும் நடைபாதையிலும் உண்மை விளம்பியபடி இருக்கும் அனுரகுமார விடமிருந்து இன்னும் எந்த சலனமும் இல்லை. நமக்குத் தெரிந்த பழைய ஜே.வி.பி. ஆட்கள் இப்படி இல்லை. ஒரு சவால் வரும்போது ஓடி வந்து அதை ஏற்றுக் கொள்வார்கள். ஆனால், இப்போதைய ஜே.வி.பி. ஆட்களுக்கு அவ்வளவு துணிச்சலான முதுகெலும்பு இல்லை, அவர்களால் தற்பெருமை காட்டத்தான் முடியும் என்றார்.

# “கிழக்கு மண்ணுக்கு ஹக்கீம், ரிஷாத் வேண்டாம்”

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்க அம்பாறை மாவட்டம் மற்றும் கிழக்கு மாகாணங்களில் எதிர்ப்புகள் எழுந்த வண்ணமுள்ளன.

ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தமது ஆதரவினை ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு வழங்கியிருந்தனர்.

மேலும் கிழக்கில் ஏமாற்றுத் தலைமைகள் ஹக்கீம், ரிஷாத் கிழக்கு மண்ணுக்கு வேண்டாம் என்ற சுவரொட்டிகளும் கிழக்கு மாகாணத்தில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளது. முஸ்லிம் அரசியல் தலைமைகளான ஹக்கீம் மற்றும் ரிஷாத் அன்றிலிருந்து இன்று வரைக்கும் ஏமாற்று அரசியலில் ஈடுபட்டு வருவதாகவும் சுயநல அரசியல் ஒழிய வேண்டும் என்றும் அப்பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர் என்றார்.

# மீனவர்களை விடுதலை...

இதையடுத்து, 8 பேருக்கும் செப்டெம்பர் 14 வரை நீதிமன்ற காவல் விதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், மீனவர்களை சிறைபிடித்ததைக் கண்டித்தும், இலங்கை சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களைத் தாயகம் திருப்பி அழைத்து வர நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் இன்று ராமேஸ்வரம் விசைப்படகு மீனவர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தால் ராமேஸ்வரத்தில் கடலுக்குச் செல்லாமல் மீன்பிடி இறங்குதளத்தில் 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது. மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கும் செல்லவில்லை.

# “தனி நபர்கள் உரிமை...

அரசியல் வழி பாதையில் நாம் சந்தித்த எத்தனையோ சவால்களில் இது மிகவும் சிறிய ஒரு சம்பவமாகும். ஆனால், கண்டி மாவட்ட தமிழர்களின் தேசிய மட்ட, மாகாண மட்ட, உள்ளூராட்சி மட்ட பிரதிநிதித்துவங்கள் என்பன விலை மதிக்க முடியாதவர்கள் அவர்கள், கண்டி மாவட்ட மக்களின் உரிமை கோஷங்கள். இந்த கோஷங்களை நாம் தொடர்ந்து முன் கொண்டு செல்வோம்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கண்டி மாவட்ட கட்சி பணியாளர் நியமனங்களை வழங்கியதன் பின்னர் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு மனோ கணேசன் அறிவித்துள்ளார்.

இதன்படி, கண்டி மாவட்ட அமைப்பாளர் எம்.விக்கினேஸ்வரன், மாவட்ட செயலாளர் குலேந்திரன் கணேசன், மாவட்ட பொருளாளர் எம். கிருஸ்ணகுமார், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம்.கே.வினோத் ஆகியோர் கட்சி பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கம்பஹா மாவட்ட அமைப்பாளர் எஸ்.சசிகுமார், கண்டி மாவட்டத்திற்கான ஒருங்கிணைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தெல் கொழும்பு அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்ட நிகழ்வில் கட்சியின் தவிசாளர் பொ.ஜெயபாலன், பிரசார செயலாளர் பரணிதரன் முருகேசு ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# செப்டெம்பரில் புதிய...

இலங்கையின் அடிப்படை சுதந்திரத்திற்கு மேலும் அச்சுறுத்தல்கள் உள்ளதாக ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் இலங்கையில் வறுமை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை மேற்கோள்காட்டி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிபரங்களின் பிரகாரம் இலங்கையில் மூன்றில் ஒரு பகுதியினர் உணவு பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையை ஆராய்வதற்கும் சாட்சியங்களைச் சேகரிப்பதற்கும் பல்வேறு முறைகளின் ஊடாக ஏற்பட்டுள்ள தடைகளை ஆராய்ந்து சர்வதேச சமூகத்தின் தலையீட்டிற்கான தற்போதைய பிரேரணையைப் புதுப்பிக்குமாறு மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் சபையின் உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் அமர்வில், தற்போதுள்ள தீர்மானத்தைப் புதுப்பிப்பதற்கு மேலதிகமாக இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# “ஜே.வி.பிக்கு தமிழர்கள்...

வவுனியாவில் தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து துண்டுப் பிரசுரம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ் பொது வேட்பாளருக்கு உரிய ஆதரவு தளம் அதிகரித்து வருகின்றது. எமது மக்கள் எமது இலட்சிய பாதையிலே பொது வேட்பாளருக்குக் கட்டாயம் வாக்களிப்பார்கள் என கருதுகிறேன்.

அத்துடன், எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் பொது வேட்பாளர் விடயம் தொடர்பாக எதிராகக் கூறும் கருத்துக்கள் அது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும். எங்களுடைய கட்சி ஒரு ஜனநாயக ரீதியான கட்சியாகும். ஆகவே அது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும். எமது கட்சியினை பொறுத்தவரை ஒரு முடிவினை எடுத்துள்ளது.

அனுரகுமாரவின் தேர்தல் விஞ்ஞானத்திலே பாதுகாப்புப் படை தொடர்பாகவும் குறிப்பாக மனித உரிமை மீறல்களைச் செய்தவர்களைக் காப்பாற்றுவது தொடர்பாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள்தான் வடக்கு கிழக்கை பிரித்தவர்கள். என்னைப் பொருத்தவரை எங்கள் மக்கள் அனுரவை பற்றிச் சிந்திக்கவில்லை என்பதுதான் உண்மை.

அனுர தேர்தல் விஞ்ஞாபனத்தில் தனது கருத்துக்களைத் தெரிவித்தாலும் கூட எங்களது அடித்தளத்தை உடைத்து எறிந்தவர்கள் ஜேவிபியினரே. இணைந்த வடக்கு கிழக்கிற்காக எங்களுடைய போராளிகள், இயக்கங்கள் எல்லோரும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர்கள். அதனை உடைத்த பெருமை ஜே.வி.பினருக்கு இருக்கின்றது.

அவர்கள் என்னதான் தேனும், பாலும் ஓடுமென்று கூறினாலும் கூட அவர்களுக்கு தமிழர் பகுதிகளில் வாக்கு போடுவது என்பது கடினமாகத்தான் இருக்கும்.

தமிழ் மக்களது தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளும் ஓர் அணியில் திரள வேண்டும் என்பதுதான் பிரதான நோக்கமாக இருக்கின்றது என்றார்.

# “மாற்றத்துக்கு சஜித் தேவை”

■ நூருல் ஹுதா உமர்

ஜனாதிபதித் தேர்தல் என்பது இந்த நாட்டின் வரலாற்றில் குறிப்பாக 70 ஆண்டுகளின் பின்பு இந்த நாட்டின் ஒரு யுக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு தேர்தலாக மாறி கொண்டிருக்கிறது. இதற்கு காரணம் கொடுங்கோல் ஆட்சி ஒன்று நாட்டில் இளைஞர்களால் அகற்றப்பட்டு குறிப்பாக 2022ஆம் ஆண்டு ‘அரகலய’ என்ற போராட்டத்தின் மூலமாக இந்த நாட்டில் ‘சிஸ்டம் சேன்ஜ்’ தேவை என்று உணரப்பட்டுள்ளது என திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி



எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

பொத்துவிலில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றிய அவர், குறிப்பாகத் தலைவர்களுக்காக மக்கள் என்ற சித்தாந்தம் மாற்றப்பட்டு மக்களுக்காகத் தலைவர்கள் என்கிற சித்தாந்தங்களும் கோட்பாடுகளும் இன்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை சஜித் பிரேமதாசவின் மேடையில் பேசப்பட்டு வருகிறது. ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாக இருந்தபோது நாட்டில் வறுமைக் கோட்டில் வாழ்கின்ற மக்களுக்காகவும் இளைஞர்களுக்காகவும் யுவதிகளுக்காகவும் செயல்பட்ட ஒரு ஆட்சியைச் செய்தார்.

ஜே.வி.பியின் வன்முறை யுத்தம் ஒன்று நடைபெற்ற பொழுது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸினுடைய ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப் இந்த நாட்டினுடைய வீர தளபதியாக இருந்தார். அவருடைய வாக்கு வாங்கி 3 இலட்சத்திற்கு அதிகமாக இருந்தது. மர்ஹூம் அஷ்ரப், இந்த நாட்டில் மாபெரும் அரசியல் மாற்றத்தைச் செய்து. அன்று நமது நாட்டின் ஜனாதிபதியாக ரணசிங்க பிரேமதாசாவின் மாற்றினார்.

இன்று பாராளுமன்றத்தில் இருக்கும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஆடம்பர பங்களாக்களில் சொகுசு வாகனங்களிலிருந்து கொண்டு அரசியல் செய்கிறார்கள். எங்களுடைய வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்றார்கள் இல்லை. எங்களுடைய கஷ்டங்களைப் பற்றிப் பேசுகின்றார்கள் இல்லை. என்று சொல்லுகின்ற இளைஞர்களின் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திப்பதற்கு இந்த நாட்டின் எதிர்கால ஜனாதிபதியாக சஜித் பிரேமதாச இருக்கிறார் என்றார்.

## ஆசிரியருக்கு பிரியாவிடை









■ எம்.எப்.றிபாஸ்.

ஆசிரியர் சேவையில் சுமார் 32 வருடங்களாக சேவையாற்றிய, அட்டாளைச்சேனை அல் அர்ஹம் வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் ஏ.சீ.எஹியாவை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் ஏ.எம்.எம். இத்ரீஸ் தலைமையில் புதன்கிழமை(28) நடைபெற்றது.

“விடைபெறும் வித்தகர் சேவை நாலன் பாராட்டு விழா” எனும் தொனிப் பொருளில் பாடசாலையின் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.றஸ்மி பிரதம அதிதியாகவும், ஓய்வு பெற்ற அதிபர் கே.எல்.ஏ.சமது, அதிபர்களான எஸ்.எம்.சாஹிர் ஹுசைன், எம்.எச்.எம.உவைஸ், ஏனைய பாடசாலைகளின் அதிபர்களான எம்.ஏ.சீ.அன்சார், ஏ.ஜீ.ஏ.சமூர், எம்.எம்.அஹ்சாத், எஸ்.எம்.றகீம், ஏ.ஆர்.ஜப்ராஸ், ஏ.அஸ்மி, எம்.எஸ். பாஹிம் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழுவினர் மற்றும் பழைய மாணவர்கள் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

## “சிந்திக்காத எருமைகள்”

■ எஸ்.சதீஸ்



இருநூறு வருட கால வரலாற்றைக் கொண்ட எங்களுடைய பரம்பரைக்கு நாளை சொந்தமாக இருப்பதற்கு ஒரு கிராமம் கிடைக்க வேண்டும் என தெரிவித்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான கணபதி கனகராஜ், அதனை முன்னெடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கே மலைய மக்கள் வாக்களிப்பர் என்றார்.

இந்த உலகத்தில் எங்கு வாழ்ந்தாலும் நான் இந்த தோட்டத்திற்குச் சொந்தக்காரர் என வந்து சொல்லக் கூடிய உரிமை இருக்கிறது. இவற்றை எல்லாம் சிந்திக்காத எருமைகள், வெறுமனே தோட்ட லயன்களை சொந்தமாக்குகிறார்கள் என்று கொச்சைப் படுத்துகிறார்.

ஒட்டுமொத்த மலையக சமூகமும் சிலிண்டர் சின்னத்திற்கு வாக்களிக்கத் திரும்பியிருக்கின்றோம். இன்று மக்கள் மத்தியில் சென்று கூறுகிறார்கள் பிரதேச சபை பிரதேச செயலகங்களை அதிகரித்து புதிய சட்டங்களை அமுல்படுத்தியதாக கூறுகிறார்கள் இவற்றை அனைத்தையும் பெற்றுக்கொடுத்தது முன்னாள் பிரதமரும் தற்போதைய ஜனாதிபதியுமான ரணில் விக்ரமசிங்க என்பதை மறந்து விட்டுப் பேசுகிறார்கள் என்றார்.

## அனுமதியுடன் நடைபெற்றது

■ நிதர்ஷன் வினோத்

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தேர்தல் ஆணைக்குழுவின் விசேட அனுமதியுடன், புதன்கிழமை (28) இடம்பெற்றது.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ், யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோரின் இணைத் தலைமையில் யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டது.

கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான



செல்வராஜா கஜேந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், முப்படை உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், அரச திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

## அடிக்கல் நாட்டும் நிகழ்வு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்தி ரணபிம வேலைத் திட்டத்தின் கீழ் வீடு நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு புதன்கிழமை (28) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய ஸ்ரீதர் உதவி பிரதேச செயலாளர் திருமதி சில்மியா சமுர்த்தி தலைமையக முகாமையாளர் வலய முகாமையாளர்கள் கிராம உத்தியோகத்தர் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நூறானியா ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்த திட்டத்தின் கீழ், காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு வீடுகள்



நிர்மாணிக்கப்படவுள்ளது. தலா ஒரு வீட்டுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஏழரை இலட்சம் ரூபா வழங்கப்படுவதுடன், காத்தான்குடி பள்ளிவாயில்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன கூட்டுச் சகாத் திட்டத்தின் மூலம் ஏழரை இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டு இந்த வீடு நிர்மாணிக்கப்படவுள்ளது.

## “காச நோயாளர்கள் கண்டியில் அதிகரிப்பு”

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் கண்டி நகர எல்லைக்குள் சுமார் 50 காசநோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளதாக கண்டி பிரதான வைத்திய அதிகாரி டொக்டர் பசன் ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயாளர்கள் பொதுவாக ஆறு நாட்களுக்குள் கண்டறியப்பட்டு சிகிச்சையை ஆரம்பிக்க முடியும் என்றாலும், காசநோய் மிகப் பெரிய சவாலாக உள்ளது.

ஏனெனில், காசநோயைக் கண்டறிவதற்கு ஆறு மாதங்கள் வரை ஆகலாம் என டொக்டர் ஜெயசிங்க தெரிவித்துள்ளார். இதற்கிடையில், தொடர்ச்சியான இருமல், உடலில் பலவீனம் மற்றும் பசியின்மை போன்ற அறிகுறிகள் காசநோயாளிகளுக்குக் குறிப்பிடத்தக்கவை, ஆனால் அவை பெரும்பாலும் சிகிச்சை அளிக்கப்படாமல் போகும், ஏனெனில் பலர் காசநோய்க்கான சரியான பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதற்குப் பதிலாக இந்த அறிகுறிகளுக்குக் குறுகிய கால தீர்வுகளை நாடுகிறார்கள்.

கண்டியில் காசநோயாளிகள் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் அவர்களின் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை வழங்குமாறும் டொக்டர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மன்னார் விபத்தில் மூவர் படுகாயம்

■ றொசேரியன் லெம்பட்

மன்னார்-உயிலங்குளத்தில் செவ்வாய்க்கிழமை (27) மாலை 4 மணியளவில் வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 3 பேர் படுகாயமடைந்து மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார்- மதவாச்சி பிரதான வீதியான உயிலங்குளத்தில் நேர் எதிரே வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்கள் பட்டா ரக வாகனத்துடன் மோதியே இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் மற்றும் பட்டா வாகனத்தில் பயணித்தவர்கள்



படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்தவர்களை உடனடியாக முருங்கன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## விபத்தில் ஒருவர் பலி

பண்டாரவளை - பூனாகல, வத்தை உடஹேன வீதியில் தேயிலை கொழுந்து பறிக்கச் சென்ற உழவு இயந்திரம், வீதியை விட்டு விலகி, சுமார் 60 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக லியங்கஹவெல பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவர், பண்டாரவளை - பூனாகல வத்தை உடஹேன பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய வீரமுத்து சுந்தரேசன் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உழவு இயந்திரத்தை ஓட்டிச் சென்ற பூனாகலையை சேர்ந்த சாரதி, விபத்தில் காயமடைந்து கொஸ்லந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவித்துள்ள பொலிஸார், பூனாகலை தோட்டத்திற்குச் சொந்தமான உழவு இயந்திரம் பறித்த தேயிலை கொழுந்தை ஏற்றி வருவதற்குச் சென்றபோதே இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவித்தனர்.

## “தேர்தலை பகிஷ்கரிக்க தயாராக வேண்டும்”

■ பாறுக் ஷிஹான்



மக்களை ஏமாற்றுவதற்காகவே அரசாங்கத்தை விமர்சித்துக் கொண்டிருக்கின்றார்கள். மக்கள் இவ்வாறானவர்களது பசப்பு வார்த்தைகளைக் கண்டு ஏமாறக் கூடாது. தேர்தலை பகிஷ்கரிப்பதற்கு மக்கள் தயாராக வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

சாணக்கியன் சுமந்திரனது செல்லப்பிள்ளை. சம்பந்தனின் செயல்வடிவம் சுமந்திரன். கூட்டமைப்பினுள் பிளவு என்பது அவர்கள் பதவிக்காக சண்டை பிடிப்பதாக இருக்கலாம் என்றார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அண்மையில் அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் விசேட செய்தியாளர் சந்திப்பில் மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதைச் சாணக்கியன் எம்.பி. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தான் தீர்மானிக்கும் என்பதை அடிக்கடி கூறி வருகின்றார். இவர்கள் இந்தியாவின் முகவர்கள் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். இந்திய மேற்கு தரப்பு எந்த முகவருக்கு வாக்களிக்க வேண்டும் என்று சொல்கிறதோ அந்த முகவருக்கு வெளிப்படையான அறிவித்தலைச் செய்வார்கள். தமிழ் மக்கள் அந்த மனநிலையில் இல்லை என்று சொன்னால் ஏதோ ஒரு வகையில் பொது வேட்பாளரை ஆதரிப்பது தொடர்பில் இறுதி நேரத்தில் எடுத்து முடிவுகளை மாறக் கூடியவர்கள்.

தங்களுக்கென்று ஒரு நிலைப்பாடு கிடையாது. சாணக்கியன் மும்மொழிகளிலும் சரளமாகப் பேசக் கூடியவர். இவ்வாறு பேசுகின்ற அவர், பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு ஆதரவாகப் பேசுகிறாரா? அல்லது எதிராகப் பேசுகின்றாரா? என்பது குறித்து மக்களால் பிரித்துணர முடியாதுள்ளது. எப்பொழுதும் அரசாங்கத்திற்கு எதிராகப் பேசுவாரே தவிர ஒரு போதும் அரசுக்கெதிராக அவர் பேசுவது கிடையாது. அரசாங்கத்தை விமர்சிப்பதன் ஊடாக அவர் மக்களுக்குத் தன்னை தமிழ்த் தேசிய வாதியாகக் காட்ட முற்படுகின்றார். மக்களை ஏமாற்றுவதற்காகவே அரசாங்கத்தை விமர்சித்துக்கொண்டிருக்கின்றார்கள். மக்கள் இவ்வாறானவர்களது பசப்பு வார்த்தைகளைக் கண்டு ஏமாறக் கூடாது. தேர்தலை பகிஸ்கரிப்பதற்கு மக்கள் தயாராக வேண்டும் என்பதை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன் என்றார்.

# டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு அளிக்கப்படும் முன்னுரிமை

விளையாட்டு எல்லோராலும் விரும்பப்படுவதுடன், என்றும் வாழ்விற்கு வழிகாட்டுகிறது. விளையாட்டில் பங்கு பெறும் அனைவரும் மகிழ்ச்சியடைகிறார்கள். விளையாடும் போது, சோதனைகளைச் சமாளித்து சாதனை புரியும் வெற்றியும் பெறுகின்றார்கள். விளையாட்டை ஒருவர் திட்டமிட்டு, வல்லுநரின் மேற்பார்வையில் விளையாடினாலும், அல்லது தன் விருப்பம் போல் விளையாடினாலும், தன்னை விரும்பி வந்தவர்களை விரும்பி ஏற்றுக்கொள்கிறது. விளையாட்டு ஆதிகால மனிதர்கள் ஓய்வு நேரத்தில் விளையாட ஆரம்பித்தாலும், அந்தப் பயிற்சியே அவர்களின் வாழ்வு போராட்டம் வெற்றி பெற வழிகாட்டி நின்றது. காட்டு மனிதர்கள் சமுதாயமாகி, நாடுகளுக்குள் தலைமை வெறி ஏற்பட்டபோது, போர்கள் உண்டாயின. அந்த சமயம் தான் போர் வீரர்கள், வீர உணர்வு பெறவும், தாக்கும் திறன் போன்ற பயிற்சிகள் எல்லாம் விளையாட்டு வடிவத்திலேயே திகழ்ந்தன.

எந்த ஒரு விளையாட்டாக இருந்தாலும், அதற்கான அர்ப்பணிப்பான பயிற்சிகள், உள்ளக போட்டிகள், முன் பயிற்சிகள், முன் பயிற்சி போட்டிகள் உள்ளிட்டவை முக்கியமாகும். ஒவ்வொரு விளையாட்டுக்கும் முன் பயிற்சி போட்டிகள் இருக்கும். டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளைக் குறிப்பிடலாம்.

டெஸ்ட் போட்டிகள் என்பது முதல் தரப் போட்டிகளின் சர்வதேச வடிவமாகும். அவை கிரிக்கெட்டின் மிக உயர்ந்த தரமாகப் பரவலாகக் காணப்படுகின்றன, டெஸ்ட் புள்ளிவிவரங்கள் மகத்துவத்தின் அளவுகோலாக உள்ளன. கடந்த காலத்தில், டெஸ்ட் போட்டிகள் நேரமில்லா அல்லது ஆறு நாள் ஆட்டங்களாக இருந்திருக்கலாம், இடையில் ஓய்வு நாட்களும் இருந்திருக்கலாம். சர்வதேச அணிகளுக்கு இடையேயான முதல் தர கிரிக்கெட் என டெஸ்டுகளை வரையறுப்பது முற்றிலும் துல்லியமானது அல்ல என்ற குற்றச்சாட்டுகள் உள்ளன.

டெஸ்ட் கிரிக்கெட் என்பது விளையாட்டின் பழமையான வடிவமாகும், இது 1877ஆம் ஆண்டுக்கு முந்தையது. இது கிரிக்கெட்டின் உச்சமாகக் கருதப்படுகிறது, ஐந்து நாட்களில் வீரர்களின் சகிப்புத்தன்மை மற்றும் திறமையைச் சோதிக்கிறது. இங்கிலாந்தின் கவுண்டி சாம்பியன்ஷிப் மற்றும் ஆஸ்திரேலியாவின் ஷெஃபீல்ட் ஷீல்ட் ஆகியவை முதல்தர போட்டிகளின் எடுத்துக்காட்டுகளாகும்.

தற்போது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டாலும், பார்வையாளர்கள் வெகு குறைவாகவே இருக்கின்றனர். வீரர்களிலும் பெரும்பாலானவர்கள் பங்குபற்றுவதில்லை. இலங்கை கிரிக்கெட் அணி தோல்வியை தழுவும் சந்தர்ப்பங்களில் எல்லாம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் வீரர்கள் பங்குபற்றாமையை குற்றச்சாட்டாக முன்வைக்கின்றனர்.

இந்நிலையில்தான், "டி20 கிரிக்கெட் பார்மெட் அனைவருக்கும் உற்சாகம் தருகின்ற வடிவமாக இருக்கலாம். இருந்தாலும் கிரிக்கெட்டின் அடித்தளமான டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு தனது பதவிக்காலத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். எங்கள் முயற்சிகள் மற்றும் பணிகள் அது சார்ந்து இருக்கும் என டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என ஐசிசி தலைவராகத் தேர்வாகியுள்ள ஜெய் ஷா தெரிவித்துள்ளார்.

உலகம் முழுவதும் கிரிக்கெட் விளையாட்டின் தரத்தை உயர்த்தும் வகையில் என்னால் முடிந்த அனைத்து பணியையும் செய்வேன். இந்த முக்கிய பொறுப்பில் என் மீது உள்ள எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வேன். 2028-ம் ஆண்டு நடைபெறும் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் இடம்பெறவுள்ளது வரலாறாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். ஆக, கிரிக்கெட்டில் டெஸ்ட் கிரிக்கெட் முக்கியமானது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

அறிவைப் பெருக்கி ஆணவத்தைச் சுருக்கு! ஆனால், கல்விமான்களில் ஒருசிலரைத் தவிர ஏனையோர் ஆணவமிடுக்குடன்தான் வாழ்கின்றார்கள். இது பொதுவானது என ஆன்மீகம் விளக்குகின்றது.

கல்வி என்பதே பொதுவுடைமை வரம். பாடசாலைகளில் கல்வி கற்காதவர்களும் சுயமாகத் தங்கள் அறிவை உயர்ந்த நிலையில் பேணுகின்றார்கள். அதனுடன், அனுபவ ஞானத்தையும் இணைத்து, புலமையாளர்களாகத் திகழ்கின்றார்கள்.

ஆனால், இந்த உலகம் பட்டதாரிகளை மட்டுமே, உயர்நிலையில் ஏற்றுக்கொள்கின்றது. படித்தவர்களைக் கௌரவப்படுத்தல் முக்கியமானது. ஆனால், தங்கள் கல்வியை, அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களைக் காணாமல் இருக்கின்றார்கள். கல்வியைப் பலவழிகளில்த் தேடலாம்.

விஞ்ஞானிகள், எழுத்துலக மேதைகள் எல்லோரும் பாடசாலைக் கல்விக் கூடாகப் படித்தவர்கள் அல்லர்; சுயசிதனையூடாகத் தங்களைப் புடம்போட்டுத் தங்கமாக உருவானவர்கள் ஆவர். கல்வி ஞானம், எல்லையில்லாப் பரமானந்தம் போன்றது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# உரிமை கோர முடியாது

முருகானந்தம் தவம்

இலங்கையின் 9ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும்செப்டெம்பர் 21ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவிக் கதிரைக்காக வழக்கமாக 'இருமுனை'ப் போட்டியே இடம்பெறும் நிலையில், இம்முறை வழக்கத்துக்கு மாறாக 'பஞ்ச முனை' (5 முனை) போட்டி ஏற்பட்டுள்ளமை எந்தவொரு பிரதான ஜனாதிபதி வேட்பாளரும் 50 சத வீத வாக்குகளைப் பெறமுடியாத நிலைமையை ஏற்படுத்தியுள்ளது.

இம்முறை 39 ஜனாதிபதி வேட்பாளர்கள் களமிறங்கிய நிலையில், ஒருவர் திடீர் மரணமடைந்துள்ளதால் ஏனைய 38 ஜனாதிபதி வேட்பாளர்களில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தி தலைவர் அனுரகுமார திசாநாயக்க, பொதுஜன பெரமுன வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகியோர் தமது வாக்கு வங்கியைப் பலப்படுத்தும் முயற்சிகளிலும் ஆதரவுத் தளத்தை அதிகரிக்கும் அணி திரட்டல்களிலும் தீவிரம் காட்டி வரும் நிலையில், பிரதான இரு வேட்பாளர்களான தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுடனும் பல கட்சிகள், பல எம்.பிக்கள் இணைந்து வருகின்றனர்

இவ்வாறான நிலையில் தான், இம்முறை தமிழ்த் தேசியக் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து தமிழ் பொதுக் கட்டமைப்பு என்ற ஓரணியாக ஜனாதிபதித் தேர்தலில் 'தமிழ் பொது வேட்பாளர்' ஒருவரைக் களமிறக்கியுள்ளதுடன், அவருக்கான ஆதரவுத் தளத்தை அதிகரித்து அதன் மூலம் அரசுக்கும் சர்வதேசத்துக்கும் தமிழ் மக்கள் தொடர்பில் ஒரு செய்தியைத் தெரிவிக்க முனைப்புக்காட்டி நிற்பதுடன், தமிழ் பொது வேட்பாளருக்குத் தமிழ் மக்கள் மத்தியிலான ஆதரவும் அதிகரித்து வருகின்றது.

எனினும், வழக்கமாக தமிழர் தரப்புக்குள் இருக்கும் 'தலைக்கன அரசியல்வாதிகள்' சிலர் இந்த தமிழ் பொது வேட்பாளருக்கு தமது எதிர்ப்பை சிலர் வெளிப்படையாகவும் இன்னும் சிலர் 'கறுப்பு ஆடுகள்' போன்றும் வெளிப்படுத்தி தமிழ் மக்களின் ஒற்றுமைக்குக் குழி தோண்டிக் கொண்டிருக்கின்றனர். இதில் முக்கியமாகத் தமிழ் தேசியக் கட்சிகளின் தாய்க்கட்சி என வர்ணிக்கப்படும் இலங்கை தமிழரசுக் கட்சியிலுள்ள 'சுமந்திரன் அணி' இந்த தமிழ் பொது வேட்பாளரைக் கடுமையாக எதிர்த்து வருகின்றது. இதேவேளை, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, இந்த ஜனாதிபதி தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளதுடன், அதற்கான தீவிர பிரசாரத்திலும் இறங்கியுள்ளது.

இவ்வாறான சூழலில் தான் தமிழரசுக் கட்சியின் வவுனியா அலுவலகமான தாயகத்தில் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அண்மையில் நடத்தப்பட்டு இந்த தமிழ் பொது வேட்பாளர் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவளிப்பது என்பது தொடர்பில் தீவிரமாக ஆராயப்பட்டு சுமந்திரன் அணியின் அழுத்தத்தால் சில முடிவுகள் எடுக்கப்பட்டன. இந்த மத்திய குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களைச் சுமந்திரன் எம்.பி. ஊடகங்களுக்கு அறிவிக்கையில், "இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்கத் தயாராகவுள்ள ஜனாதிபதி வேட்பாளர், அந்த நிலைப்பாட்டைத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சிங்கள மக்களுக்கும் வெளிப்படுத்தத் தயாராக இருந்தால் அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானிப்போம் என்ற கருத்து கூட்டத்தில் சொல்லப்பட்டுள்ளது" என்று தெரிவித்திருந்தார்.

அதேவேளை, ஜனாதிபதி வேட்பாளர்களில் பிரதானமான இருவரான ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச ஆகியோர் யாழ்ப்பாணம் வந்து எம்மை சந்தித்துப் பேசியபோது, அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் முன்வைத்த விடயங்கள், தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவில்லை. அதனை நாம் அவர்களுக்கும் சொல்லியுள்ளோம் என்றும் சுமந்திரன் கூறியுள்ளார்.

அதன் பின்னர் அவர் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போது, "ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி யாருக்கு ஆதரவளிக்கும் என்பது இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் அவசரப்பட வேண்டிய தேவை கிடையாது. வாக்களிப்பு இடம்பெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் எமது தீர்மானத்தை அறிவிப்போம். தமிழ் பொது வேட்பாளருக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கவில்லை. அவர் எங்களின் கட்சி உறுப்பினர். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம். இதன் மூலம் எமது நிலைப்பாட்டை விளங்கிக் கொள்ளவேண்டும். கடந்த கால தேர்தல்களிலும் எமது நிலைப்பாட்டை இறுதித் தருணத்திலேயே அறிவித்திருந்தோம். அதற்கமைய 80 சதவீதமானோர் எமது தீர்மானத்துக்கு அமையவே வாக்களித்தார்கள். ஆகவே, இம்முறையும் நாங்கள் குறிப்பிடும் வேட்பாளருக்கே எம்மக்கள் வாக்களிப்பார்கள் என கூறியுள்ளார்.

> **இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு இரு தெரிவுகள் மட்டுமே உண்டு. ஒன்று, தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களியுங்கள் என தமிழ் மக்களைக் கோர வேண்டும். இரண்டு, தமிழ் மக்கள் தாம் விரும்பியவர்களுக்கு வாக்களிக்கலாம் என கூறவேண்டும். இவ்விரண்டில் ஒன்றைச் செய்யாது விட்டால், இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ் மக்களினால் புறக்கணிக்கப்பட்ட, வெறுக்கப்பட்ட கட்சி என்பதனை அக்கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையே ஏற்படும்**

இங்கு இலங்கை தமிழரசுக் கட்சியிடம் அதிலும், சுமந்திரன் அணியிடம் ஒரு சில கேள்விகளை எழுப்ப வேண்டியுள்ளது. அதாவது, "இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்கத் தயாராக உள்ள ஜனாதிபதி வேட்பாளர் அந்த நிலைப்பாட்டைத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் சிங்கள மக்களுக்கும் வெளிப்படுத்தத் தயாராக இருந்தால், அவருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தீர்மானிப்போம்" என்ற விடயம் தமிழரசுக் கட்சியினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்கத் தயார் என எந்தவொரு சிங்கள வேட்பாளரும் அறிவிக்கப் போவதுமில்லை. தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப் போவதுமில்லை. ஆகவே, தமிழரசுக் கட்சியினால் நிச்சயம் சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்கள் எவருக்கும் ஆதரவளிக்க முடியாது. அவ்வாறானால் உங்கள் ஆதரவு எந்த வேட்பாளருக்கு?

அடுத்ததாக இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி அடிப்படையிலான அதிகார பகிர்வுடைய ஆட்சி முறையை வழங்கத் தயார் என தமிழ் பொது வேட்பாளரினால் மட்டும் தான் அறிவிக்க முடியும். தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படும். அப்படியானால் தமிழரசுக் கட்சி தமிழ் பொது வேட்பாளரைத்தான் ஆதரிக்க வேண்டும். உங்கள் தீர்மானத்தின் படி, ஆதரிப்பீர்களா?

உங்கள் கட்சி தீர்மானத்தின்படி, உங்களினால் சிங்கள ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவளிக்க முடியாது. "தலைக்கன அரசியல்வாதிகள்" என்ற வகையில் உங்களினால் தமிழ் பொது வேட்பாளருக்கும் ஆதரவளிக்க முடியாது என்றால், உங்களின் அடுத்த தெரிவு என்ன? கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்த ஜனாதிபதித் தேர்தலைப் பகிஷ்கரிக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளது போல், நீங்களும் இந்த ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்க வேண்டும். அதனை செய்வீர்களா?

"யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பில் அவசரப்பட வேண்டிய தேவை கிடையாது. வாக்களிப்பு இடம்பெறுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர் எமது தீர்மானத்தை அறிவிப்போம். கடந்த கால தேர்தல்களிலும் எமது நிலைப்பாட்டை இறுதி தருணத்திலேயே அறிவித்திருந்தோம். அதற்கமைய 80 சதவீதமானோர் எமது தீர்மானத்துக்கு அமையவே வாக்களித்தார்கள். ஆகவே, இம்முறையும் நாங்கள் குறிப்பிடும் வேட்பாளருக்கே எம்மக்கள் வாக்களிப்பார்கள்" என்று சுமந்திரன் எம்.பி. கூறியுள்ளார். கடந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சி கூறினால் என்ன? கூறாவிட்டால் என்ன? தமிழ் மக்கள் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களிக்காது, சஜித் பிரேமதாசவுக்குத்தான் வாக்களித்திருப்பார்கள். இது சிறு குழந்தைக்கும் தெரியும். எனவே, தமிழ் மக்களின் அந்த முடிவுக்கு தமிழரசுக் கட்சி உரிமை கோர முடியாது.

ஆகவே, இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக் கட்சிக்கு இரு தெரிவுகள் மட்டுமே உண்டு. ஒன்று, தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களியுங்கள் என தமிழ் மக்களைக் கோர வேண்டும். இரண்டு, தமிழ் மக்கள் தாம் விரும்பியவர்களுக்கு வாக்களிக்கலாம் என கூறவேண்டும். இவ்விரண்டில் ஒன்றைச் செய்யாது விட்டால், இலங்கை தமிழரசுக் கட்சி தமிழ் மக்களினால் புறக்கணிக்கப்பட்ட, வெறுக்கப்பட்ட கட்சி என்பதனை அக்கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையே ஏற்படும்.

## கடிதங்கள்

### கனவாகும் வீடுத் திட்டம்

நுவரெலியா, கொட்டகலை பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான பெயித்திலி தோட்டம் கிரேகிளி குரூப் மக்கள் நீர் பிரச்சினை, இடப்பற்றாக்குறை உள்ளிட்ட நெருக்கடிகளால் பெரும் சிரமங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

ஒவ்வோர் அரசாங்கங்களிலும் இருந்தும் தோட்டங்களுக்கு வீட்டுத் திட்டங்கள் கிடைத்தன. கொட்டகலை பெருந்தோட்ட கம்பனிக்குச் சொந்தமான 21 தோட்டங்களில் 20 தோட்டங்களுக்கு மூன்று தடவைகள் வீட்டு திட்டங்கள் வந்து விட்டன. ஆனாலும், எங்களுக்கு இன்னும் அது கனவாகவே இருக்கின்றது.

பத்தனை ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரிக்கு அருகாமையில் 120 க்குமேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வாழ்கின்றனர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஐந்துக்கும் மேற்பட்ட நபர்கள் வாழ்கின்றனர்.

பல தோட்டங்களுக்கு வீட்டுத் திட்டம் கிடைத்தாலும், எமது தோட்டத்துக்கு இது பெரும்பாலும் கனவாகவே இருக்கின்றது. ஒவ்வோர் அரசியல்வாதிகளும் எங்களை ஏமாற்றிதான் செல்கின்றனர். ஆகவே, எங்களுக்கான வீட்டுத்திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுப்பீர்கள் என ஆர்வத்துடன் காத்து இருக்கின்றார்கள்.

– செல்வராஜ் சிவகுமார் (ஆசிரியர்)
பத்தனை–பெயித்திலி



## நாட்டார் நிகழ்த்து கலைகளில்

# காவடியாட்டம்



த.விதுஷன்,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

‘காவடி’ எனும் சொல்லானது காவுதடி எனப் பொருள்படுகின்றது. இன்று காவுதடி எனும் சொல் மருவி உருவாகியதாகவே காவடி கருதப்படுகின்றது. காவடியினுடைய உண்மையான தோற்றம் தொடர்பாக உறுதியான தகவல்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. இலங்கையிலும், தமிழ் நாட்டிலும் குறிப்பாகத் தமிழர் வாழுகின்ற பல்வேறுபட்ட நாடுகளிலும் உள்ள முருகன் கோவில்களில் வழிபாட்டின் ஒரு முக்கியமான கூறாகக் காவடியாட்டம் காணப்படுகின்றது.

அந்த வகையில், காவடியாட்டம் யாழ்ப்பாண சமூகத்தில் எவ்வாறான நிகழ்த்துகை வடிவம் பெற்றமை என்பது தொடர்பாக மாதகல், அராலி, கோண்டாவில், ஆனைக்கோட்டை, இணுவில் ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு செ.ஜசிகரன், ந.முருகதாஸ், செ.ஆனந்தராசா, ச.நகுலேஸ்வரன், பு.குகணேஸ், பஞ்சமூர்த்தி குமரன் ஆகியோரிடம் இருந்து தரவுகள் பெறப்பட்டுள்ளன. மக்கள் ஏதேனும் ஒரு விடயத்தை மனதில் வைத்து அவ்விடயம் நடந்தால் காவடி எடுப்பதாக நேர்த்தி வைப்பார்கள். குறிப்பாக ஏதேனும் ஒரு நோய்தீர வேண்டும், அல்லது குடும்பத்தில் ஏற்பட்ட சிக்கல்கள் மற்றும் இன்னல்கள் நீங்க வேண்டும், குழந்தைப் பாக்கியம் கிடைக்க வேண்டும், திருமணம் நடக்க வேண்டும் என பல காரணங்களுக்காக மக்கள் நேர்த்தி வைத்து காவடியெடுக்கின்றனர். கோவில்களில் காவடி எடுப்பதனை சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரையும் பங்கேற்பதனை இன்று காணலாம். கா அடி எனப்படுவது காவாகச் சுமக்கப்படுகின்ற முருகப் பெருமானின் திருவடிகளைக் குறித்து நிற்கின்றது. கா என்பது இருபுறமும் தொங்கும் சுமையைக் குறித்து நிற்கின்றது. ‘காவடியாட்டம்’ என்பது ‘காவடி ஆட்டம்’ என்ற இரு சொற்களினுடைய இணைப்பினால் உருவாகியுள்ளது.

இது ஆரம்பத்தில் சுமை சுமப்பதற்கான நீளமான ஒரு தடியைக் ‘கோல்’ குறித்து நின்றது. இதன் தொடர்ச்சியாக ஒரு நீளமான தடியின் இரண்டு முனைகளிலும் பழங்கள், தானியங்கள், பால், தேன், இளநீர் மற்றும் கிழங்கு வகைகள் என பல்வேறுபட்ட பொருட்களைச் சுமந்து செல்லுகின்ற போக்கு காணப்படுகின்றது. பூக்கள், வெட்டிவேர், மஞ்சமுனாத்தடி, புல்லாந்தி அல்லது பிரம்பு, மயிலிறகு, பட்டுத்துணி, போன்றவற்றினால் காவடிகள் அழகுபடுத்தப் படுகின்றன. இன்றைய காலத்தில் காவடி கல் பல்வேறுபட்ட முறைகளில் அழகுணர்ச்சியுடன் உருவாக்கப்படுகின்றது. எது எவ்வாறாயினும், இதனுடைய அடிப்படைப் பகுதியாக ஒரு தடியே காணப்படுகின்றது. இத் தடியின் இரு முணைகளையும் இணைக்கும் முகமாக மரத்தாலும் குறிப்பாக மஞ்சமுனா மரத்தாலும், புல்லாந்திப் பிரம்புகளினாலும் ஆன ஒரு வளைவான அமைப்பில் அமைந்திருக்கும். இதன் மேற்பகுதியில் அழகான குஞ்சங்களுடன் பட்டுத்துணியால் போர்க்கப்பட்டிருக்கும். நான்கு மூலைப் பகுதிகளிலும் ஏராளமான மயில் இறகுகளை ஒன்றுசேர்ந்து இருப்பது காவடிக்கு அழகு சேர்க்கின்றது. வளைவுப் பகுதியின் உச்சியில் உயரமான கூம்பு வடிவிலான அலங்காரம் கூறும் அமைந்து காணப்படும். பொதுவாகக் காவடிகளைப் பொறுத்த வரையில் 3 அடி அகலமுள்ளதாக இருக்கும். இது 5 கிலோ தொடக்கம் 7 கிலோ வரையிலான நிறை கொண்டதாகக் காணப்படும். இருப்பினும் சிறுவர்களும் காவடி எடுக்கின்ற வழமை காணப்படுவதனால் அவர்களுக்கு நிறை குறைவான சிறிய காவடிகளும் இன்று உருவாக்கப்படுகின்றன.

காவடி கட்டப்படுகின்ற பொருள்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகைகளாக வகைப்படுத்தப்படுகின்றது. பால் காவடி, பன்னீர்க் காவடி, மச்சக் காவடி, சர்ப்பக் காவடி, வேல்க் காவடி, வெள்ளிக் காவடி, கரகக் காவடி, தாளக் காவடி, பாட்டுக் காவடி, சாக்குக் காவடி, நட்சத்திரக் காவடி, வேல் சூழக் காவடி, சயினக் காவடி, ஆஞ்சநேயர் காவடி, ஐயனார் காவடி, ஆபரணக் காவடி, சந்தனக் காவடி, தயிர்க் காவடி, தேன் காவடி, தேர்க் காவடி, அக்கினி காவடி, மிட்டாய்க் காவடி, அபிஷேக காவடி, சேவல் காவடி, பாம்புக் காவடி போன்ற பல்வேறுபட்ட வகைகளில் காவடி அமைந்திருப்பதனைக் காணலாம். ‘மீன் போல் பிறவிக் கடலில் தத்தளிக்கின்றேன். கருடனைக் கண்டு, இதிலிருந்து மீட்டு உன்னோடு சேர்த்துக்கொள்’ என்பது மச்சக் காவடியினுடைய தத்துவமாகக் காணப்படுகின்றது. ‘மிரளும் பாம்புப் புற்றுக்குள் ஒளிவது போல, பிறவித் துன்பம் எனும் புற்றில் தவிக்கின்றேன். இதிலிருந்து மீட்டு உன்னோடு சேர்த்துக்கொள்’ என்பது சர்ப்பக் காவடியினுடைய தத்துவமாகக் காணப்படுகின்றது. ‘விடியற் காலையில் கூவும் சேவல் போல், பிறவியாகிய இருளிலிருந்து எனக்கு எப்போது விடியல் வரும்?’ என்பது சேவல் காவடித் தத்துவமாக அமைகின்றது. ஆரம்பத்தில் பல்வேறு நேர்த்திகளை வைத்து முருகப் பெருமானை நினைத்து தங்களுடைய நேர்த்திக் கடன்களைச் செலுத்தி வந்தார்கள் பக்தர்கள். காலப் போக்கில் இன்று அம்மன், பிள்ளையார், ஐயனார் போன்ற சகல தெய்வங்களுக்கும் காவடி எடுக்கின்ற மரபு காணப்படுகின்றது.





**காவடியாட்டுபவர் என்ற தனிப்பட்ட கலைஞர்கள் காணப்படுவது கிடையாது. பொதுவாக இளவயதில் இருப்பவர்கள் காவடியாட்டுபவராக காணப்படுகின்றார். குறிப்பாக 25-30 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர்களே இதனை மேற்கொள்கின்றனர். அடுத்ததாகக் காவடியாட்டத்தின் முக்கியமான கலைஞர்களாக நாதஸ்வரம், தவில் வாசிக்கும் கலைஞர்கள் காணப்படுகின்றனர்**

காவடியாட்டத்தினைப் பொறுத்தவரையில், இடத்திற்கு இடம் பிரதேசத்திற்குப் பிரதேசம் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டமைந்திருப்பதனைக் காணலாம். குறிப்பாக காவடியாட்டத்திற்குப் பயன்படுத்தப் படுகின்ற இசைக் கருவிகளைக் கொண்டும், காவடி ஆட்டத்தினுடைய நிறைவில் வழங்கக் கூடிய உணவினை அடிப்படையாகக் கொண்டும் வேறுபட்டு இருப்பதனை அவதானிக்கலாம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் தவில் நாதஸ்வரம், உடுக்கு போன்ற கருவிகள் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் ஆனைக்கோட்டை, இணுவில், மானிப்பாய், நல்லூர் போன்ற இடங்களில் காணப்படுகின்ற கோவில்களில் அதிகளவு நாதசுரமும், தவிலுமே பயன்படுத்தப்படுகின்றது. இருப்பினும், காவடியாட்டத்தின் போது உடுக்கு பயன்படுத்தப்படுவது. குறைவானதாகக் காணப்பட்டாலும் இன்றும் சில கிராமப்புறங்களில் அமைந்துள்ள கோவில்களில் இது பயன்பாட்டில் உள்ளது. ஆபிரம்பிட்டி முத்துமாரியம்மன் கோவில், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், மாதகல் முருகன் போன்ற கோயில்களில் இன்றும் காவடியாட்டத்தின் போது, உடுக்குப் பயன்படுத்தப்படுவதனைக் காணலாம். தீவகப் பிரதேசங்களில் குறிப்பாக முல்லைத்தீவு பிரதேசத்தில் காவடியாட்டத்தின் போது, அதிகளவு பறை பயன்படுத்தப்படுகின்றது. அதேபோன்று ஒவ்வொரு பிரதேசத்திலும் காவடியாட்ட நிறைவின்போது, வழங்கப்படுகின்ற உணவானது ஒவ்வொரு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது. மடை, அவியல், குளிர்த்தி, சுளகுமடை, அவிசு போன்ற பல்வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகின்றது.

காவடி எடுக்கின்றபோது அலகு, பாற்குடம், செடில் அல்லது முள் போன்றவற்றைத் தெய்வத்திற்கு முன்பாக வைத்து கற்பூரம் கொளுத்தி ஆராத்திகள் காண்பித்து வேண்டுதல் செய்வார்கள். அதே சமயம் காவடி எடுப்பவரின் பெயரில் அர்ச்சனைகள் இடம்பெற்று தெர்ப்பை போட்டு அலகு குத்தி, முள் குத்தி காவடி எடுக்கின்ற வழக்கம் காணப்படுகின்றது.

அதேபோன்று ஒவ்வொரு நிகழ்த்துக் கலைகளுக்கும் ஒவ்வொரு தனித்துவமான நிகழ்த்து களம் காணப்படுவது வழமை. காவடியாட்டத்தினுடைய நிகழ்த்து

களத்தினைப் பொறுத்தவரையில், கோயில் காணப்படுகின்றது. குறிப்பாகக் காவடியினைத் தூக்கி வைக்கும் கோயிலிலிருந்து நேர்த்தி வைத்த கோயில் வரையுமான வீதிகள் காவடியாட்டத்திற்கான நிகழ்த்து களமாகக் காணப்படுகின்றது. அதேபோன்று நேர்த்தி வைத்த கோயிலினுடைய உள் வீதிகளும், வெளிவீதிகளும் இதற்கான நிகழ்த்து களங்களாகவே அமைகின்றன.

காவடியாட்டத்தின்போது, நாதஸ்வரம், தவில் வாசிக்கின்ற மரபு காணப்பட்டது. ஆரம்பக் காலங்களில் சின்ன மேளக் காரர்களே காவடி எடுக்கின்ற போது நாதஸ்வரம், தவில் போன்றவற்றை வாசித்தார்கள். ஆனால், இன்று சின்ன மேளம் என்ற ஒன்று காணப்படுவதில்லை அதனால், கோயிலில் வழமையாக வாசிப்பவர்களே காவடிக்கும் வாசிக்கின்றனர். காவடி எடுத்தலின் போது, ‘தந்தனனா... நானனா... தானனன... நனனா .....’ என்றே ஆரம்பத்தில் வாசிக்கின்றனர். பின்னர் முருகனுடைய பாடல்கள் வாசிக்கப்படுகின்றது. ‘வேலவா வடி வேலவா ...’ போன்ற பாடல்களைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். ஆரம்பத்தில் எளிய மெட்டுகளிலேயே வாசிக்கப்படுகின்றது. கூடுதலாகக் காவடியாட்டத்தின் போது முருகன் பாடல்களே வாசிக்கப்படுகின்றது. இவ்வாறாகக் காவடி ஆட்டத்தின் போது, தவில், நாதஸ்வரம் போன்ற இசைக் கருவிகள் மாத்திரம் அன்றி, உடுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. குறிப்பாகக் காவடியாட்டத்தினுடைய ஆரம்பக்காலம் முதலே உடுக்கடித்து பாடுகின்ற மரபு காணப்பட்டது. ஆனால், இன்று உடுக்கடித்து பாடுகின்ற மரபு அருவி வருவதனைக் காணலாம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில், ஆபிரம்பிட்டி முத்துமாரியம்மன் கோவில், காரைநகர் ஈழத்துச் சிதம்பரம், மாதகல் முருகன் கோயில் போன்ற கோயில்களிலும் சில கிராமப்புறக் கோயில்களில் மாத்திரமே காவடியாட்டத்தில் உடுக்கு பெருமளவு பயன்படுத்தப்படுகின்றது. ‘முந்தி முந்தி விநாயகனே... பிள்ளையாரே முக்கண்ணன் தன்மகன் பிள்ளையாரே’ என்ற உடுக்குப் பாடல் ஆரம்பத்தில் உடுக்கடித்துப் பாடப்படுகின்றது. இதனைவிடச் சுருதி, தாளம் போன்றனவும் காவடிக்கான இசைக்கருவியாகவே பயன்படுத்தப்படுகின்றது.

காவடியாட்ட நிகழ்த்துக் கலைக்குப் பெரும்பாலும் கைவினைப் பொருட்களும் பயன்படுத்தப்படுகின்றது. முற்று முழுதாக காவடியினை எடுத்து நோக்குகின்ற போது பெருமளவு கைவினைப் பொருட்கள் பயன்படுவதனை அவதானிக்கலாம். குறிப்பாகப் பூக்கள், வெட்டிவேர், மஞ்சமுனாத்தடி, புல்லாந்தி அல்லது பிரம்பு, மயிலிறகு, பட்டுத்துணி, செண்டு போன்ற பல கைவினைப் பொருட்கள் பயன்படுகின்றது. காவடியாட்டத்தினுடைய முக்கியமான கலைஞராகக் காவடி கட்டுபவர் காணப்படுகின்றார். ஏனெனில், காவடியாட்டத்தின் முக்கியமான ஒன்றாகக் காவடி காணப்படுவதால் காவடி கட்டுகின்றவர் பிரதானமான கலைஞராகக் காணப்படுகின்றார். காவடியினை முற்று முழுதாக வடிவமைக்கின்ற பொறுப்பு இவரிடம் காணப்படுகின்றது. காவடியினை உருவாக்குவதிலிருந்து, அதனை அழகு படுத்துகின்ற செயற்பாட்டைச் செய்பவர் இவரே. இவர்களைப் பொறுத்த வரையில் இதனைப் பரம்பரை பரம்பரையாக மேற்கொள்கின்றனர். கூடுதலாகக் காவடி கட்டுபவர்கள் மாமிசம் சாப்பிடுவதில்லை. அவர் காவடியினைக் கட்டுவது மாத்திரமல்லாது, காவடியினைத் தூக்கி வைக்கின்ற சடங்கினையும் மேற்கொள்கின்றார். மற்றும் அலகு குத்துதல், செடில் குத்துதல் சார்ந்த சடங்கினையும் இவர் நிறைவேற்றுகின்றார். காவடி கட்டுபவர்கள் இத் தொழிலினை புனிதமாகவே மேற்கொள்கின்றனர். ஏனெனில், இது ஒரு நிகழ்த்துக் கலைக்கான தொழில்துறை மாத்திரம் அல்லாது ஒரு கடவுள் வழிபாடு சார்ந்த சடங்காகவும் காணப்படுவதனால் இதனைப் புனிதமாகவே மேற்கொள்கின்றனர்.

காவடியாட்டத்தினுடைய மற்றைய முக்கிய கலைஞராக உடுக்கடிப்பவர் காணப்படுகின்றார். உடுக்கடித்து காவடியாடுகின்ற மரபு ஆரம்பக் காலங்களிலிருந்து இன்றுவரை பின்பற்றப்பட்டு வருகின்றது. இருப்பினும், இன்று உடுக்கடித்து பாடல் பாடி காவடி எடுக்கின்ற மரபு சற்றுக் குறைவடைந்து வருவதனைக் காணலாம். இதற்குக் காரணம் இளைய சமுதாயத்தினர் காவடியாட்டத்தின் போது, சினிமாப் பாடல்களைப் பாட முனைகின்ற தன்மை இதற்குக் காரணமாக அமைகின்றது. அதற்காக நாதஸ்வர, தவில் இசைகளை அதிகம் விரும்புகின்றனர். உடுக்குப் பாடல்களில் சினிமா சார்ந்த பாடல்கள் பாடுவது இல்லை. எது எவ்வாறாயினும், காவடியாட்டத்தினுடைய முக்கியமான கலைஞராக உடுக்கடிப்பவர் காணப்படுகின்றார். உடுக்கடிப்பவரும் உடுக்குப் பாடல் பாடுபவரும் அதே நபராகவே காணப்படுகின்றார். ஆரம்பத்தில் பிள்ளையார் பாடல்களைப் பாடுவது வழமையானதாகும். ‘முந்தி முந்தி விநாயகனே... பிள்ளையாரே முக்கண்ணன் தன்மகன் பிள்ளையாரே’ இவ்வாறான பாடல்களே ஆரம்பத்தில் உடுக்கடித்துப் பாடப்படுகின்றது. உடுக்கடித்துப் பாடுகின்ற போது காவடி எடுப்பவர்க்கு உத்வேகத்தைக் கொடுப்பதாக அமைகின்றது.

குறிப்பாக ஒரு கோயிலிலிருந்து இன்னொரு கோயில் நோக்கி காவடி ஆடிச் செல்லுகின்ற போது களைப்பை நீக்கி காவடியாடுபவருக்கு உத்வேகத்தைக் கொடுப்பவராக உடுக்குக் கலைஞர் காணப்படுகின்றார். உடுக்குக் கலைஞர்களைப் பொறுத்தவரையில் உடுக்கடித்துப் பாடுகின்ற போது அவர்களுக்குக் களைப்பு ஏற்பட்டால் அவரிற்குப் பதிலாக இன்னொரு உடுக்கடிப்பவர் பாடல் பாடி உடுக்கினை அடிக்கின்றார். காவடியாட்டத்தினுடைய மற்றுமொரு கலைஞராக காவடியாட்டுபவர் காணப்படுகின்றார். காவடியாட்டுபவர் என்ற தனிப்பட்ட கலைஞர்கள் காணப்படுவது கிடையாது. பொதுவாக இளவயதில் இருப்பவர்கள் காவடியாட்டுபவராக காணப்படுகின்றார். குறிப்பாக 25-30 வயதிற்கு இடைப்பட்ட இளைஞர்களே இதனை மேற்கொள்கின்றனர். அடுத்ததாகக் காவடியாட்டத்தின் முக்கியமான கலைஞர்களாக நாதஸ்வரம், தவில் வாசிக்கும் கலைஞர்கள் காணப்படுகின்றனர்.

(வெள்ளிக்கிழமை தொடரும்...)

# மானுடம் தோற்றது



றொசிட்டா
அன்றன்



பார்வையற்ற தன் தாயின் அன்றாட கடமைகளை அவசரம் அவசரமாக செய்து முடித்தாள் தீபா. அம்மா சாப்பிடுவதற்கான உணவை சாப்பாட்டு மேசையில் எடுத்து வைத்தாள். செவிப்புலனற்றோர் பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றுகிறாள் தீபா.

பஸ் ஏறும் இடத்தில் தீபா வழமையாக சந்திக்கும் சீதா அக்கா நின்றாள் மகளுடன். “எப்படி அக்கா சுகம் என்று சைகையூடாக கேட்டாள். சீதா வாய் பேச முடியாதவள். தீபா படிபிக்கும் அதே பாடசாலையில் தானாம் சீதா கல்வி கற்றவளாம். அதே பாடசாலையில் கல்வி பயின்ற தினேஸ் என்பவரை திருமணம் செய்துக் கொண்டாள். அவரும் வாய் பேச முடியாதவர்.

படிக்கும் காலத்திலே கைதொழில் ஒன்றை கற்று தேர்ச்சி பெற்று இன்று தையலகம் ஒன்றை இருவரும் நடாத்தி வருகின்றனர்.

இருவரும் மனமொத்த தம்பதிகளாய் மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். அவர்களுக்கு மகள் பிறந்ததும் கவலை ஒன்று வாட்டத் தொடங்கியது.

தங்களை போல மகளும் வாய் பேச முடியாதவளாய் இருப்பாளோ என்ற கவலை. அவர்கள் இருவருக்கும் சொந்தங்கள் இல்லை. ஆசிரமம் ஒன்றிலே வளர்ந்து தீபா தற்போது படிப்பிக்கும் பாடசாலையில் இருபது வருடங்களுக்கு முன் படித்து வெளியேறியவர்கள். தீபாவின் அம்மா சீதாவின் நெருங்கிய தோழியாக இருந்தப்படியால் தீபாக்கு சீதாவுடன் பழகும் வாய்ப்பு அதிகம் கிடைத்தது. சீதாவின் மகளை வளர்க்கும் பொறுப்பு தீபாவின் அம்மாவிடம் கையளிக்கப்பட்டது.

தீபாவின் அம்மா மகேஸ்வரிக்கு அன்று பார்வையிருந்தது. “அம்மா நலமா கண் பார்வை திரும்புமா இல்லை இனி இப்படியே இருக்கனுமா” தனது கை சைகையால் கேட்டாள் சீதா.

“இல்லை இனி பார்வை வராது அக்கா” என்றாள் துக்கத்துடன் தீபா. சீதாவிடமிருந்து விடைப்பெற்றறாள். பஸ் இறங்கும் இடம் வந்ததும் பாடசாலைக்கு நடையை கட்டினாள்.

இன்று கை வேலைப்பாடு செய்முறை நடாத்த ஆசிரியர் ஒருவர் வருவதாக தலைமை ஆசிரியர் கூறினார்.

“தீபா இண்டைக்கு கொஞ்சம் வேலை கூட இருக்கும். பிள்ளைகளுக்கு செய்முறை வகுப்பு நடக்கும்” என்று அதிபர் கூறியதும் தீபா தலையசைத்து விட்டு அகன்றாள்.

வீட்டு நினைவு அவ்வப்போது வந்து போய்க் கொண்டிருந்தது. அம்மா பாவம் ஐம்பத்தியாறு வயதிலே பார்வையை இழந்தவராய் இன்னொருவரின் தயவில் வாழ்கின்றாள். தவறான சிகிச்சையால் ஏற்பட்ட விளைவே! கண் பார்வையற்றவராய் மகேஸ்வரி.

இன்று சீதா அக்காவின் மகள் ஊமையாக வளர்ந்து விடக்கூடாது என்பதற்காக அம்மா தனது குழந்தையாக நினைத்து சீதாவின் குழந்தையை வளர்த்தாள். அவள் பேசும் வரை ஓயவில்லை. இன்று அவள் பேசுவை மட்டுமே தீபாவின் தாய் கேட்கிறாள்.

சீதாவின் முகத்தின் மகிழ்ச்சியை காண முடியாத துர்பாக்கியம் மகேஸ்வரிக்கு ஏற்பட்டது வேதனையே! தீபா சுயநினைவுக்கு வந்தவளாய் மீண்டும் தனது வேலையில் முழ்கினாள். இரண்டு மணிக்கு வேலை. முடிந்ததும் பஸ் ஏறியவள் மீண்டும் தாயின் நிலையை எண்ணி கவலைப்பட்டாள். பிரஷர் என்று தான் ஆஸ்பத்திரியில அனுமதித்த போதும் கண்ணில் எந்த பிரச்சினையும் இருக்கவில்லை.

சிறிய சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்றார்கள். ஏன் எதற்கு என்பதற்குள் அனைத்தும் நிறைவேறி விட்டது. கண் பார்வையை இழந்தவராய் சுயநினைவற்றவராய் மகேஸ்வரி. வைத்தியர்களிடம் முறைப்பாடு செய்தும் பயனற்று போனது. ஆறு மாதங்கள் கோமாவில் அம்மாவை பார்க்கும் போது கவலையாக இருந்தது.

தீபா பஸ்சில் இருந்து வீட்டை நோக்கி நடந்தாள். வீட்டில் சீதா அக்கா அம்மாவிற்கு சாப்பாடு ஊட்டி கொண்டிருந்தார்.

“அக்கா வந்து கண நேரமோ” சைகையால் தீபா சீதாவிடம் கேட்க அவளும் “ஆம்” என்றாள்.

“அம்மாவை இந்த நிலையில் விட்டு நான் எங்கும் செல்ல முடியாது, எனக்கான வாழ்க்கை தேடவும் முடியாது சீதா அக்கா” என்று தீபா கவலைப்பட்டாள். “கடவுள் பார்த்துக் கொள்வார்” என்று ஆறுதல் சொன்னாள் சைகை மொழியில் சீதா.

காலங்கள் விரைந்தன. செவிபுலனற்ற சிறுவர்களுடன் சுற்றுலா பயணம் கட்டாயம் செல்ல வேண்டிய நிலை தீபா மறுக்கவும் முடியாது, அம்மாவை தனியாக விட்டுச் செல்லவும் முடியாத நிலை.

கடைசியாக சீதாவிடம் உதவி பெறுவது என்று தயங்கி தயங்கி தீபா “அம்மாவை இரண்டு நாள் பார்த்துக்கொள்ள வேண்டும்” என்றாள். சீதாவும் கணவரிடம் அனுமதி பெற்று கொண்டு மகேஸ்வரியின் வீட்டில் தங்கி அம்மாவை கவனித்துக் கொண்டாள்.

தீபா சுற்றுலாப் பயணத்தின்போது, ஒன்றை உணர்ந்தாள். மாற்றுதிறனாளிகளான இந்தக் குழந்தைகளின் உலகம் அழகானது.

இவர்களுக்கான பணிவிடைகளை தீபா நேர்த்தியாகவும்,மனம்நிறைந்ததாகவும் நிறைவேற்றுவதால் தான் தனது தாயை பார்த்துக்கொள்ள கடவுள் வழி பண்ணியுள்ளார் என்று தனக்குள்ளே கடவுளுக்கும், சீதா அக்காவிற்கும் நன்றி கூறிக்கொண்டாள்.

சுற்றுலாவை முடித்துக் கொண்டு இரண்டு நாட்களின் பின் வீடு வந்து சேர்ந்தாள் தீபா. களைபுற்றிருந்த அவளுக்கு தேத்தண்ணி ஊற்றி வந்தாள் சீதா.

“அக்கா நன்றி உங்கட உதவியால தான் நான் நிம்மதியாக வேலைக்குப் போறன்” கையெடுத்து கும்பிட்டாள் தீபா. தனது மகள் இன்று வாய் பேச கூடியவளாய் இருப்பற்கு காரணமே உன் அம்மா தான் காது கேட்கின்றதா என்று மகேஸ்வரி அக்கா நிமிசத்திற்கு, நிமிசம் பாட்டு பாடி கதை சொல்லி அவள் அழகாக கதைக்கும் வரை பார்த்து வளர்தவள் அதற்கு நான் எப்படி நன்றி கடன் செலுத்துவேன்” என்று தனது சைகையால் சீதா தீபாவை கலங்கிய கண்களுடன் உரையாடினாள்.

சீதா அக்காவின் உதவியால் தீபா நிம்மதியாக செவிப்புலனற்றோர் பாடசாலைக்கு சென்று வந்தாள். என்றோ ஒரு நாள் செய்த நன்மை பயக்கு என்பது நிதர்சனம். (முற்றும்)

அவுஸ்திரேலியா

# முடிவுக்கு வரும் ஆண் இனம்?

ஆண்களிடம் காணப்படும் 'லு குரோமோசோம்கள்' மறைந்து வருவதாக ஆய்வில் அதிர்ச்சிகரமான தகவல் வெளியாகியுள்ளது.

உலகம் எல்லாவற்றிலும் மாற்றமடைந்து பெரும் முன்னேற்றத்தை சந்திக்கும் போது மனிதர்களில் உள்ள இரண்டு பாலின குரோமோசோம்களில் ஒன்றான 'லு குரோமோசோம்' எவ்வாறு மறைந்து போக வாய்ப்புள்ளது என்பதை உயிரியலாளர்கள் ஆய்வின் மூலம் அதிர்ச்சிகரமான முடிவுகளை வெளியிட்டுள்ளனர்.



இந்த குரோமோசோமின் முழுமையான மறைவு என்பது எதிர்காலத்தில் ஆண் சந்ததியின் முடிவைக் குறிக்கும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். எனினும், அப்படி முழுமையாக நாம் நம்பத் தேவையில்லை, அவற்றில் சில நம்பிக்கைகளும் உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து, புகழ்பெற்ற மரபியல் பேராசிரியர் ஜெனிஃபர் ஏ.மார்ஷல் கிரேவ்ஸ், "கடந்த 300 மில்லியன் ஆண்டுகளில், அதன் அசல் 1,438 மரபணுக்களில் 1,393ஐ இழந்து விட்டது, 45 மரபணுக்கள் மட்டுமே எஞ்சியுள்ளன" என தெரிவித்துள்ளார்.

மேலும் 'லு குரோமோசோமின்' நேரம் முடிந்து விட்டதாகவும் இந்த போக்கு தொடர்ந்தால், அவை 11 மில்லியன் ஆண்டுகளுக்குள் முற்றிலும் மறைந்துவிடும் என்றும் இது ஆண் சந்ததியின் எதிர்காலம் மற்றும் மனித உயிர்வாழ்வு பற்றிய அச்சத்தை எழுப்புவதாகவும் ஜெனிஃபர் ஏ.மார்ஷல் கவலை தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்

### கமலா ஹாரிஸுடன்

## நேரடி விவாதத்தில் டிரம்ப்



ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கமலா ஹாரிஸுடன் நேரடி விவாத நிகழ்வில் பங்கேற்க குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் சம்மதம் தெரிவித்துள்ளார்.

இந்த விவாத நிகழ்வை ஏ.பி.சி. நியூஸ் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் ட்ரம்ப் ஆகியோர் நேரடி விவாதத்தில் ஈடுபட்டனர். அப்போது, பைடன் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக இருந்தார். அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தல் போட்டியிலிருந்து அவர் விலகியது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார். இந்தச் சூழலில்தான் பென்சில்வேனியாவில் எதிர்வரும் செப்டெம்பர் 10ஆம் திகதி நடைபெறும் விவாத நிகழ்வில் கமலா ஹாரிஸ் மற்றும் டொனால்ட் டிரம்ப் பங்கேற்க உள்ளனர்.

டோக்கியோ

## ஜப்பானில் அரிசிக்கு தட்டுப்பாடு

ஜப்பானில் இதுவரை இல்லாத அளவிற்கு அரிசி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், அரிசி பற்றாக்குறை விரைவில் தீர்க்கப்படும் என அந்நாட்டு அரசு உறுதி அளித்துள்ளது.

நிலநடுக்கம், சுனாமி, சூறாவளி ஆகியவற்றால் மிகுந்த இன்னலுக்கு ஆளாகும் நாடுகளில் ஜப்பான் முதலிடத்தில் உள்ளது. தற்போது அங்கு உணவு தானிய பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது. அங்கு உருவாகியுள்ள அரிசி தட்டுப்பாடு, அரசுக்கும், மக்களுக்கும் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.



வரும் சில நாட்களில் நிலநடுக்கம் மற்றும் சூறாவளி ஏற்படும் என ஆய்வாளர்கள் கணித்துள்ளனர். இது பற்றிய தகவல்கள் சமூக ஊடகங்களிலும், தொலைக்காட்சிகளிலும் வேகமாக பரவின.

இதனால் அச்சமடைந்த மக்கள் அனைவரும் வீட்டில் அரிசியை வாங்கி குவித்து வைத்திருப்பதும் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு காரணமாக மாறிவிட்டது. அதேநேரம், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததும் அரிசி தட்டுப்பாட்டிற்கு மற்றொரு காரணமாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக, ஜப்பான் விவசாயத்துறை அமைச்சர் டெட்சுஷி சகாமோடா கூறுகையில், "அரிசி பற்றாக்குறை நிலைமை விரைவில் தீர்க்கப்படும். அதுவரை மக்கள் அமைதியாக இருக்க வேண்டும். செப்டம்பர் இறுதிக்குள் 40 சதவீதம் அறுவடை பணி நடைபெறும். புதிய அறுவடை காலம் வந்துவிட்டால் பற்றாக்குறை தீர்ந்துவிடும்" என்று தெரிவித்தார்.

சண்டிகர்

### பிரபல விளையாட்டு வீராங்கனை

## அரசியலில் நுழைகிறார்



தங்கள் கட்சியில் வந்து சேருமாறு பல்வேறு அரசியல் கட்சிகளிடம் இருந்து அழுத்தம் வருவதாக பிரபல மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் தெரிவித்துள்ளார்.

பரிஸ் ஒலிம்பிக் போட்டியில் 100 கிராம் எடை கூடுதலாக இருந்ததால் மல்யுத்த இறுதிப்போட்டியில் நுழைந்த இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில், ஹரியானாவில் உள்ள ஜிந்த் நகரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு வினேஷ் போகத் பேசுகையில், "அரசியலில் சேர வேண்டும் என்று பல்வேறு கட்சிகளிடம் இருந்து எனக்கு தொடர்ந்து அழுத்தம் வருகிறது. ஆனால், இது குறித்து எந்த முடிவும் எடுக்கவில்லை. குடும்பத்தில் உள்ள மூத்தவர்களிடமும், நலன் விரும்பிகளிடமும் விவாதித்து அடுத்தக்கட்ட முடிவை எடுப்பேன். விளையாட்டு, அரசியல் இரண்டிலும் கவனம் செலுத்துவேன்" என்றார்.

சென்னை

## "பாலியல் சுரண்டல்கள் முடிவுக்கு வரவேண்டும்"



திரைத்துறையில் பாலியல் சுரண்டல்கள் முடிவுக்கு வரவேண்டும் என நடிகையும், பாரதிய ஜனதா கட்சியை சேர்ந்தவருமான குஷ்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மலையாள திரைத்துறையில் பெண்களுக்கு எதிராக நடக்கும் பாலியல் அத்துமீறல்கள் குறித்த ஹேமா கமிஷன் அறிக்கை வெளியானதிலிருந்து நடிகைகள் பலரும் தங்களுக்கு நடந்த பாலியல் தொந்தரவு பற்றி வெளிப்படையாகவே பேசியும், புகார் அளித்தும் வருகிறார்கள்.

இது குறித்து குஷ்பு தனது எக்ஸ் வலைத்தள பக்கத்தில், "திரைத்துறையில், நிலவும் 'மீ டூ' பிரச்சினை நெஞ்சை உடைய வைத்தது. பெண்கள் தங்களின் வாழ்க்கையில் முன்னேற சமரசம் செய்யவேண்டும் என்ற எதிர்பார்ப்பு, பாலியல் வன்கொடுமைகளை சந்திப்பது போன்ற விடயங்கள் எல்லா துறைகளிலும் உள்ளது. சமீபத்தில் மலையாள திரையுலகில் எழுந்துள்ள பாலியல் புகார்கள் என்னுடைய மனதை உலுக்குகிறது. பாலியல் வன்கொடுமைகளை யாரும் மறைக்க வேண்டியதில்லை. அனைத்து ஆண்களிடமும், பாதிக்கப்பட்டவருக்கு ஆதரவாக நிற்கவும், உங்கள் அசைக்க முடியாத ஆதரவைக் காட்டவும் நான் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

கொல்கத்தா

## மன்னிப்பு கோரினார் மம்தா

கொல்கத்தா மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்டுள்ள சம்பவத்திற்கு, அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜி மன்னிப்பு கோரியுள்ளார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் மம்தா வெளியிட்டுள்ள பதிவில், "சில நாட்களுக்கு முன்பு ஆர்.ஜி.கார் மருத்துவமனையில் நடந்த சோகமான சம்பவத்தில் உயிரிழந்த சகோதரிக்கு திரிணமுல் கட்சி சத்ர பரிஷத் நிறுவன தினத்தை அர்ப்பணிக்கிறேன்.

கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டு மரணமடைந்த சகோதரியின் குடும்பத்தினருக்கும், இந்தியா முழுவதும் இதேபோன்ற சம்பவங்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இதயப்பூர்வமான அனுதாபங்கள் என்றார்.

# 'Bikethon 2024' சைக்கிள் சவாரி



தற்கொலை எண்ணங்கள் அல்லது செயல்களுக்கு இட்டுச் செல்லும் பல்வேறு அழுத்தங்கள் மற்றும் நெருக்கடிகளால் அவதிப்படுபவர்களுக்கு அதற்கான பதிலைப் பெற வழிவகுக்கும் வகையில், இலவச 1333 தொலைபேசி இலக்கம் மற்றும் சேவை தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'Bikathon 2024' என்ற துவிச்சக்கரவண்டி சவாரி கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இருந்து இன்று வியாழக்கிழமை(29) முதற்கட்டமாக ஆரம்பமாகவுள்ளது.

'Bikethon 2024' சைக்கிள் சவாரியின் மொத்த தூரம் 1333 கிலோ மீற்றராகும். கொழும்பில் இருந்து தொடங்கி 85ஆவது கிலோ மீற்றரான கித்துல்கலையில் முடிவடையும். "உயிர்களைக் காப்பாற்றும் வழியில்" என்ற தொனிப்பொருளிலேயே இந்த சைக்கிள் சவாரி நடைபெறுகின்றது.

CCC அறக்கட்டளையால் நடத்தப்படும் 1333 நெருக்கடித் தீர்வு சேவையைப் பற்றிய பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு 'Bikethon 2024' சவாரி ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றது.




2009இல் ஆரம்பிக்கப்பட்ட 1333 தொலைபேசி நெருக்கடி தீர்வு சேவையானது, தற்போது பெருமளவிற்கு ஆதரவளிக்க முடிந்துள்ளதாக CCC அறக்கட்டளையின் நிறுவனர் ஜேதா தேவபுர தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ACL கம்பனியின் கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (27) நடைபெற்ற இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் CCC அறக்கட்டளையின் ஸ்தாபகர் ஜேதா தேவபுர, CCC அறக்கட்டளை இலங்கையின் தலைவர் சுரேஷ் மெண்டிஸ் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது, CCC அறக்கட்டளையின் ஸ்தாபகர் ஜேதா தேவபு கூறியதாவது, "வருடாந்த சைக்கிள் சவாரி 'Bikathon', 1333 கட்டணமில்லா நெருக்கடி தீர்வு சேவையை வெற்றிகரமாக மக்களுக்கு தெரியப்படுத்தியுள்ளது. மற்றும் 1333 தொலைபேசி இலக்கமானது இலங்கையில் தற்கொலை வீதத்தை குறைப்பதற்கு பங்களிக்க முடிந்தது.

தினமும் 8 முதல் 10 இலங்கையர்கள் தற்கொலை செய்து கொள்வதாகவும், இறக்கும் ஒவ்வொருவருக்கும் 30க்கும் மேற்பட்டோர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். எனவே, 1333 தொலைபேசி இலக்கத்தை நடைமுறைப்படுத்துவதன் நோக்கம் தற்கொலை எண்ணங்கள் அல்லது செயல்களுக்கு வழிவகுக்கும் பல்வேறு அழுத்தங்கள் மற்றும் நெருக்கடிகளால் துன்புறுத்தப்படுபவர்களை அடையாளம் கண்டு அந்த அழுத்தங்கள் மற்றும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க அவர்களுக்கு ஊக்கமளிப்பதே ஆகும்" என தெரிவித்தார்.

### மட்டு, அம்பாறை கழக கிரிக்கெட் தொடர்:

## ஜொலிபோய்ஸ் வெற்றி வாகை

வி.சுகிர்தகுமார்




மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட 64 கழகங்களை உள்ளடக்கியதாக ஏற்பாடு செய்து நடாத்தப்பட்ட மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரில் அக்கரைப்பற்று ஜொலிபோய்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அக்கரைப்பற்று தர்மசங்கரி விளையாட்டு மைதானத்தில ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று டீன் ஸ்டாரை வென்றே ஜொலிபோய்ஸ் சம்பியனானது.

சம்பியனான ஜொலிபோய்ஸுக்கு 100,000 ரூபாய் பணப்பரிசு மற்றும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. இரண்டாமிடம் பெற்ற டீன் ஸ்டாருக்கு 50,000 ரூபாய் பணப்பரிசும் வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. தொடரின் நாயகனாக ஜொலிபோய்ஸின் தினேஸ், இறுதிப் போட்டியின் நாயகனாக அதேயணியின் சாந்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### நெடுந்தீவ கால்பந்தாட்ட லீக் தொடர்:

## ஈகிள் எய்ட் சம்பியன்



அஸ்ஹர் இப்றாஹிம்

நெடுந்தீவு கால்பந்தாட்ட லீக் ஒழுங்கு செய்திருந்த கால்பந்தாட்ட லீக் தொடரில் ஈகிள் எய்ட் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில், கரிகாலன் சேனை விளையாட்டுக் கழகத்தை 2-0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனானது.

சம்பியனான ஈகிள் எய்ட்டுக்கு சம்பியன் கிண்ணமும் 130,000 ரூபாயும் வழங்கப்பட்டதுடன், இரண்டாமிடம் பெற்ற கரிகாலன் சேனைக்கு 100,000 ரூபாய் பணப்பரிசைப் பெற்றது.

### இலங்கை எதிர் இங்கிலாந்து:

## இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்



இலங்கை, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டியானது லோர்ட்ஸில் இன்று வியாழக்கிழமை(29) பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பிக்கிறது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில், இங்கிலாந்து இலகுவாக வெல்லுமென எதிர்பார்த்திருந்த நிலையில், பலத்த சவாலை இங்கிலாந்துக்கு இலங்கையளித்திருந்தது.

முதலாவது போட்டியில் இலங்கைக்கு அச்சுறுத்தலாக இருந்த மார்க் வூட் காயமடைந்த நிலையில் அவரை இங்கிலாந்து அணியில் ஒலி ஸ்டோன் பிரதியிடுகிறார்.

இந்நிலையில், இலங்கை அணியில் மாற்றமெதுவும் இருக்காதென கருதப்படுகின்ற போதும் குசல் மெண்டிஸிடமிருந்து தொடர்ந்து ஓட்டங்கள் வரவில்லையென்றால் அவர் பதும் நிஸங்க மூலம் பிரதியிடப்படக்கூடும்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 29, ஆகஸ்ட் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.